வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk
மலர் : 03
20.04.2022 புதன்கிழமை
இதழ் : 135
பக்கங்கள் : 16







# ரம்புக்கனையில் கலவரம் ஒருவர் பலி; 24 பேர் காயம்!

- நால்வரின் நிலை கவலை!
- ஊரடங்கு சட்டம் அமுல்
- இராணுவத்தினர் குவிப்பு
- ஐ. நா., அமெரிக்கா கண்டனம்



கேகாலை, ஏப்ரல் 20

கேகாலை - ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப் படுத்த பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயி ரிழந்தார். 24 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் நால் வரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக கேகாலை போதனா மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. 15

## நாடு முழுவதும் போராட்டங்கள்; பொருட்கள் விலையேற்றத்தால்!



கொழும்பு, ஏப். 20

நேற்று முன்தினம் நள்ளி ரவு முதல் எரிபொருட்கள் விலையுயர்ந்தன. இதைத் தொடர்ந்து கோதுமை மா உள்ளிட்ட உணவுப் பொருட் களின் விலைகளும் உயர் வடைந்தன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று அதிகாலை முதல் நாடு முழுவ தும் போராட்டங்கள் வெடித்துள்ளன. 15

## பாணின் விலையும் உயர்ந்தது



கொழும்பு, ஏப். 20

ஒரு இறாத்தல் பாணின் விலை 30 ரூபா வினால் அதிகரிக்கப்பட் டுள்ளதாக பேக் கரி உரிமையாளர் கள் சங்கம் தெரி 15

## கோதுமை மாவின் விலை 40 ரூபாவினால் அதிகரிப்பு



கொழும்பு, ஏப். 20

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 40 ரூபா வால் அதிகரிக்க பிரீமா நிறுவனம் அதன் விற் பனை முகவர்களுக்கு 15


## பெற்றோல் 338 ரூபா!



கொழும்பு, ஏப். 20

நேற்று செவ்வாய்க் கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனமும் எரிபொருள் விலைகளை உயர்த்தியுள்ளது. 15

## பஸ் கட்டணமும் உயர்வு



கொழும்பு, ஏப். 20

எரிபொருள் விலை அதி கரிப்பின் தொடராக பஸ் கட்டணங்களின் தொகை கள் 35 சதவீதத்தினால் அதி கரிக்கப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை போக்குவரத்து அமைச்சர் 15

## மதிய உணவுப்பொதிகளின் விலை 20வீதத்தால் உயர்வு



கொழும்பு, ஏப். 20

டீசல் லீற்றர் ஒன்றின் விலை நேற்று முன் தினம் இரவு முதல் 113 ரூபாவால் அதிகரிக்கப்பட் டுள்ளதை அடுத்து, மதிய உண வுப் பொதிகளின் விலை 20 வீதத் தால் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை 15

## பாடசாலைகள் இன்று இயங்கும்!

### இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 20

இன்றைய தினம் நாட் டில் சகல பாடசாலை களும் நடைபெறும் என்று இலங்கை ஆசிரி யர் சங்கம் அறிவித்துள் ளது. போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஆசி ரியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து செல்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் இன்று தேசிய போராட்ட நாளாக அறிவித்து தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு 300 தொழிற்சங் கள் ஒன்றிணைந்த 15

## நிதியமைச்சர் அலி சப்ரி குழு நாணய நிதியத்துடன் பேச்சு!

### இலங்கைக்கு உதவுமாறு இந்தியாவும் கோரிக்கை

வாஷிங்டன், ஏப். 20

நிதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழு நேற்று வாஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்ரலினா ஜோர் ஜியாவை சந்தித்துப் பேச்சு நடத்தியது.

இதனிடையே, இந்திய நிதியமைச்சருக்கும் 15



சர்வதேச நாணய நிதியத்தில் நேற்றுமுன்தினம் இந்திய, இலங்கை நிதியமைச்சர்கள் குழு பிரத்தியேகமாக சந்தித்து பேசியபோது...!

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இந்த அரசாங்கம் தவறிழைத்துவிட்டது என்பது நாம் சொல்லி தெரியவேண்டியதல்ல. அதனை அவர்களே ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

தவறுக்கு - ஒன்றுக்கு இரண்டு தடவைகள் ஜனாதிபதியே மன்னிப்பும் கேட்டுவிட்டார். நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, நான் பதவியில் இருந்து விலகப்போவதில்லை என்று அவர் கூறவில்லை. தவறுகளை திருத்திக்கொண்டு தனது மிகுதி பதவிக்காலத்தையும் தொடரப்போவதாகவும், நாடு இப்போது எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு விரைவில் தீர்வை பெற்றுத்தரமுடியும் என்று தான் நம்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

அவர் பதவி விலகினாலும், நமது அரசியலமைப்பின்படி பிரதமரோ அல்லது சபாநாயகரோதான் ஜனாதிபதி ஆவார்கள். அவரிடம் இப்போதைய ஜனாதிபதிக்கு இருக்கும் சர்வ வல்லமை பொருந்திய அதிகாரங்கள் இருக்கவே செய்யும்.

பின்னர், பாராளுமன்றில் பெரும்பான்மையைப் பெறுகின்ற கட்சி அல்லது குழு ஆட்சி அமைக்கலாம்.

இன்றுள்ள நிலையில் எதிர்க்கட்சியால் பெரும்பான்மையை பெற முடியாது என்பது அவர்கள் கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கிடைக்கும் ஆதரவைப் பார்க்கும்போதே புரிந்துகொள்ளலாம்.

அதையும் மீறி, சிறுபான்மை அரசு ஒன்றை இடைக்கால தீர்வாக அமைத்தாலும், அது தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும் தொங்கு பாராளுமன்ற ஆட்சிக்கு மிடையே மீண்டும் முறுகலையும் ஸ்திரத்தன்மையற்ற நிலையையும் தான் தோற்றுவிக்கும்.

அவ்வாறான நிலையில், நாம் எல்லோரும் எதிர்பார்க்கும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையோ மேற்குலகின் உதவியையோ பெற்றுக்கொள்வதிலும் அது சிக்கலை ஏற்படுத்துமே தவிர, நமது இன்றைய பிரச்னைக்கு தீர்வை ஏற்படுத்தப்போவதில்லை.

அரசியலமைப்பில் இருபதாவது திருத்தத்தை நீக்கிவிட்டு, பத்தொன்பதாவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவர ஜனாதிபதி சம்மதம் தெரிவித்திருப்பதாக மற்றுமொரு செய்தி தெரிவித்தது.

நல்ல விடயம்தான். ஆனால், அதுகூட நமக்கு பழைய சம்பவங்களைத்தான் ஞாபகப்படுத்துகின்றது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது, ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியில் இருந்தார். இருவரும் நடாத்திய குடுமிபிடி சண்டை பிரபல்யமானது.

ஜனாதிபதி இருபதாவதை நீக்கிய பின்னர், ரணில் தலைமையில் ஓர் இடைக்கால அரசாங்கமோ, அல்லது ராஜபக்ஷ கோஷ்டி அல்லாத எவர் ஒருவர் தலைமையில் ஓர் இடைக்கால ஆட்சி வந்தாலும் அது ஜனாதிபதியுடன் ஒரே திசையில் பயணிக்குமா? அல்லது இருவேறு திசைகளில் பயணிக்குமா என்பதை உறுதியாக சொல்லமுடியாத நிலைமையே ஏற்படும்.

ஆளும்தரப்பில் என்ன நடக்கின்றது என்பதை அறிய, பிரதமருடன் நெருக்கமான ஒருவருடன் பேசினேன். தமது தரப்பில் நூற்றுஇருபத்திரண்டு பேர் உறுதியாக இருப்பதால், ஆட்சியை எப்படியாவது தொடர்வதே அவர்களின் நோக்கம் என்பதை அறியமுடிந்தது.

ஆனால், மறுபக்கத்தில் நாடு முழுவதும் போராட்டங்கள் நாட்டை உலுக்கிக்கொண்டிருக்கின்றன. இந்த அரசு பதவியில் இருந்து வெளியேறவேண்டும் என்ற கோஷம், அவர்கள் பதவியிலிருந்து இறங்கும் வரை ஓங்கி ஒலிக்கவே செய்யும், இன்னும் உக்கிரமாக.

அவர்கள் பதவியில் தொடர்வதில் உறுதியாக இருக்க, போராட்டக்காரர்கள் தமது முடிவில் உறுதியாக இருக்க, நாட்டின் பொருளாதார நிலைமை இன்னும் இன்னும் மோசமாகிக்கொண்டே செல்லும்.

ரூபாவின் மதிப்பு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துகொண்டே செல்ல, பொருட்களின் விலையும் எகிறிக்கொண்டே இருக்கப் போகின்றது.

அவர் ஒரு வங்கி கிளை முகாமையாளர். அலுவலகம் வந்த அவரிடம் கேட்டேன், உங்கள் வங்கிக்கு வழமையாக வருகின்ற வெளிநாட்டு பண மாற்றீடு கொஞ்சமாவது வருகின்றதா என்று.

அவர் சொன்னார், ""அறவே இல்லை, அதிகம் ஏன், எனக்கு இடையிடையே லண்டனில் உள்ள அண்ணனும் சகோதரியும் சிறிய தொகையை அவ்வப்போது அனுப்புவார்கள். அவர்கள்கூட இப்போது அனுப்புவதில்லை"".

"ஏன், இப்போது அனுப்பினால் உங்களுக்கு கொஞ்சம் அதிகமாக கிடைக்குமே, அவர்கள் அனுப்பலாம்தானே?" என்று கேட்டேன்.

அவர் சொன்னார், "அப்படித்தான் நானும் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் கொஞ்சம் பொறு, பிரிட்டிஷ் பவுண்கள் உங்கள் காசுக்கு ஆயிரம் ரூபாவாக உயரும். அப்போது அனுப்புகின்றோம் என்கிறார்கள்" என்றார்.

இந்த சம்பாசணையை ஏன் உங்களுடன் பகிர்ந்துகொண்டேன் என்பது புரிந்திருக்கும்.

வழக்கமாக நமது நாட்டுக்கு வரும் வெளிநாட்டு பணமும் இப்போது முற்றாக நின்றுவிட்ட நிலையில், நாடு இன்னமும் பாதாளத்தை நோக்கித்தான் சென்றுகொண்டிருக்கின்றது என்பதை ஞாபகப்படுத்தவே!

- ஊர்க்குருவி

# தலைகள் மாறினாலும் மக்கள் இந்த அரசை நம்பமாட்டார்கள்!

### கூறுகிறார் அனுரகுமார திஸநாயக்க

கொழும்பு, ஏப். 20

தலை மாறி ஆட்சி அமைத்தாலும் மக்கள் இந்த அரசாங்கத்தை நம்பவில்லை எனவும், மக்களின் நம்பிக்கையில்லாத ஆட்சியாளரால் இந்த நெருக்கடியிலிருந்தும் புதிய நிர்வாகத்திலும் வெளிவர முடியாது எனவும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும்-

ஒரு நாட்டிற்கு இயற்கைப் பேரிடர் ஏற்பட்டால் அதை எதிர்கொள்வது நமது கடமை, ஆனால் இது நீங்கள் உருவாக்கிய நெருக்கடி. விவசாயப் பிரச்னை பாராளுமன்றத்தில் எத்தனை தடவை எழுப்பப்பட்டது?" விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டபோது, விவசாயிகளை தூண்டி விடுவதாக கூறினீர்கள். நாட்டுக்கு ஒரு கொடிய பேரழிவை ஏற்படுத்திய ஜனாதிபதியை குறை சொல்ல வேண்டுமா? இது பாத்திரம் கழுவும் போது பாத்திரத்தை உடைப்பது போன்ற பாவம் அல்ல. விவசாயிகளின் வாழ்க்கையை அழிக்கிறது- என்றார். (அ)

# அமைச்சுப் பதவிகளை பெற்று முஸ்லிம் மக்களை தலை குனிய செய்துள்ளனர் முஸ்லிம் எம்.பிக்கள்!

### முன்னாள் எம்.பி. ஹுனைஸ் பாருக் குற்றச்சாட்டு

மன்னார், ஏப். 20

இன்று இந்த அரசாங்கத்துக்கு எதிராக பாமர மக்கள் படித்த மக்கள் என்று அனைவரும் அரசாங்கமும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக கோஷமிட்டு கொண்டிருக்கிறார்கள்.இந்த அரசாங்கம் விட்ட தவறுகளை அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்த மக்களே சுட்டிக் காட்டக்கூடிய ஒரு நிலை காணப்படுகிறது.இந்த நிலையில் அமைச்சுப் பதவிகளை பெற்று முஸ்லிம் மக்களை தலை குனிய செய்து விட்டார்கள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாருக் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் இந்த அரசாங்கமும் அரசாங்கத்தைச் சார்ந்தவர்களும் செய்த அடாவடித்தனங்கள் அட்டூழியங்களுக்கு கடவுள் கொடுக்கும் சாபமாக இந்த பிரச்னை எழுந்திருக்கிறது.

அதனை இன்று பெரும்பான்மை இன மக்களே மேடை போட்டுச் சொல்கிறார்கள்.

ஆனால் குறிப்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை எடுத்திருப்பது என்பது முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு தலைகுனிவை ஏற்படுத்தி இருக்கிறது. வெட்கம், ரோசம் ,மானம் இருந்தால் இந்த அமைச்சுப் பதவிகளை அவர்கள் எடுத்திருக்க மாட்டார்கள்.

பள்ளிவாசலுக்குள் நோன்பிருந்தபோது பன்றி இறைச்சியை வீசி எறிந்தார்கள். அதே போல் கிறிஸ்தவ தேவாலயங்களில் குண்டு வைத்து தங்களது ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் ஆட்சி பீடம் ஏறுவதற்கு சதி செய்தார்கள்.

இதனால் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் இன்னும் சிறை வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அவ்வாறு அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள் என்று யார் யாரெல்லாம் அரசாங்கத்துக்கு எதிராக செயல்பட்டு கேள்வி கேட்டார்களோ அவர்களை அடையாளம் கண்டு இந்த அரசாங்கம் அடக்கி ஒடுக்கி வைத்தது.

எமது வன்னி மாவட்டத்தை பொறுத்த மட்டில் மீன்பிடி, விவசாயம் பிரதான தொழிலாக இருக்கிறது.

அதற்கு எரிபொருள் விலையேற்றம், பசளை தொடர்பாக இந்த அரசாங்கம் கொண்டு வந்த கொள்கைகளினால் மக்கள் அன்றாடம் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பல காரணங்களுடன் முஸ்லிம்களுக்கு இந்த அரசாங்கம் செய்த அட்டூழியங்களை சுட்டிக்காட்டி ஆர்ப்பாட்டங்கள் செய்கின்ற இந்த நேரத்தில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை எடுத்து இருக்கின்றார்கள்.

அவர்கள் இந்த அரசாங்கத்தின் ஆட்சியை பாதுகாக்கவும் அவர்களுடைய சொகுசு வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் அமைச்சுப் பதவிகளை பெற்றிருக்கிறார்கள்.

இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானை அரசியலுக்கு கொண்டு வந்து அறிமுகப்படுத்தினேன்.

பாராளுமன்ற தேர்தலில் பாராளுமன்றத்தில் எனக்கும் சதி செய்து அவர் பாராளுமன்றத்துக்கு சென்றார். இவ்வாறான ஒருவரை நான் பாராளுமன்றம் செல்வதற்கு உதவி செய்தேன் என்று நானே வெட்கி தலை குனிகிறேன்-என்றார். (அ)

# சுயாதீனமாகவே செயற்படுவோம்

### மைத்திரிபால சிறிசேன சபையில் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 20

அரசிலிருந்து விலகிய நாற்பது பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ளவில்லை எனவும், சுயேச்சைக் குழுவாகவே எதிர்க்கட்சியில் செயற்படுகிறோம் எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் நாளுக்கு நாள் கோபமடைந்து வருகின்றனர். இளைஞர்களின் போராட்டத்தை வாழ்த்துகிறோம்.போராட்டம் நியாயமானது என்று சொல்கிறோம்.

பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டியது பாராளுமன்றம்தான்.அதற்கு ஏற்ற வேலைத்திட்டத்திற்கு செல்ல வேண்டும். 20வது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டு 19வது திருத்தச் சட்டம் திருத்தங்களுடன் அமுல்படுத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகிய நாங்கள் கூறுகின்றோம்-என்றார். (அ)

# அமெரிக்க டொலர் 339 ரூபா!

கொழும்பு, ஏப். 20

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 327 ரூபா50 சதமாகவும், விற்பனை பெறுமதி 339 ரூபா 99 சதமாகவும் பதிவாகியுள்ளது.

அவ்வாறே, ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 428 ரூபா 51 சதம். விற்பனை பெறுமதி 443 ரூபா 67 சதமாகவும்,

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 357 ரூபா 42 சதம் விற்பனை பெறுமதி 369 ரூபா 33 சதமாகவும்,

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 348 ரூபா 10 சதம். விற்பனை பெறுமதி 361 ரூபா 68 சதமாகவும்,

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 260 ரூபா 78 சதம் விற்பனை பெறுமதி 271 ரூபா 52 சதமாகவும்,

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 241 ரூபா 11 சதம். விற்பனை பெறுமதி 252 ரூபா 10 சதமாகவும்,

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபா 58 சதம் விற்பனை பெறுமதி 2 ரூபா 68 சதமாகவும் பதிவாகியுள்ளது. (அ)

ஈழநாடு
வார இதழ்
Eelanadu
20.04.2022 புதன்கிழமை
பிலவ வருடம், சித்திரை 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# புதிய அமைச்சரவை ?

அரசாங்கம் புதிய அமைச்சரவையை நியமித்திருக்கின்றது. ஜனாதிபதியை வீட்டுக்கு செல்லுமாறு கூறி - சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் எதிர்ப்பு தெரிவித்துவரும் நிலையில்தான், இந்த அமைச்சரவை நியமனம் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் போராட்டக் காரர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் அடிபணியாது என்பதை ஜனாதிபதியும், அரசாங்கமும் உறுதியாக தெரிவித்திருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, இந்த அமைச்சரவை நியமனத்தை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார். ஒரு ஸ்திரமான அரசாங்கம் இல்லாது, சர்வதேச நாணய நிதியத்தை அணுக முடியாது. இந்த பின்புலத்தில் தான், பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைமையை தற்காலிகமாக எதிர்கொள்ளும் உபாயங்கள் தொடர்பிலேயே ராஜபக்ஷக்கள் கவனம் செலுத்துகின்றனர் எனத் தெரிகின்றது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன்களை பெறுவதன் மூலம், தற்போது மக்கள் எதிர்கொண்டுவரும் அன்றாட பிரச்னைகளுக்கு தற்காலிகமாக தீர்வை கண்டுவிட்டால், காலிமுகத்திடல் போராட்டகாரர்களை பலவீனப்படுத்திவிட முடியுமென்றே அவர்கள் கருதுகின்றனர்.

மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பொருளாதார சுமைகள்தான், போராட்டக்காரர்களின் பலமாக இருக்கின்றது. இதனை ஓரளவு சரிசெய்து, போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தி விட்டால், அதன் பின்னர் அரசாங்கத்தை சுமுகமாக கொண்டுசெல்ல முடியுமென்றே அரசாங்கம் கணக்குப் போடுகின்றது. பிரச்னைகளை நிரந்தரமாக தீர்ப்பதற்கு பதிலாக, தற்காலிகமாக தீர்ப்பது தொடர்பிலேயே வியூகங்கள் வகுக்கப்படுகின்றன.

அரசாங்கம் இவ்வாறு கருதுவதற்கு பின்னால், எதிரணியின் பலவீனங்களும் இருக்கின்றன. எதிரணி தங்களை இன்றுவரையில் சரிவர ஒழுங்குபடுத்திக் கொள்ளவில்லை. சஜித் பிரேமதாஸ அடுத்த ஜனாதிபதி - தானே என்னும் அடிப்படையிலேயே செயல்பட்டு வருகின்றார். இதனால், எதிரணிக்குள்ளும் ஒரு குழப்ப நிலைமை பேணிப் பாதுகாக்கப்படுகின்றது.

ரணில் ஒருபுறமாகவும், சம்பிக்க ரணவக்க ஒருபுறமாகவும், கரு ஜெயசூரிய இன்னொரு புறமாகவும் தனித்தனியாகவே செயல்பட்டு வருகின்றனர். ஒப்பீட்டடிப்படையில், சஜித் பிரேதாஸவின் எதிரணி பலமாக இருந்தாலும்கூட, சஜித் அனைவரின் ஆதரவையும் பெறாது விட்டால், அவரால் முன்னோக்கிப் பயணிக்க முடியாது. சந்திரிகா குமாரதுங்கவும் சில காய் நகர்த்தல்களில் ஈடுபட்டு வருகின்றார். எதிரணிக்குள் இவ்வாறான குழப்ப நிலைமை தொடருமானால், ராஜபக்ஷக்கள் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கான வாய்ப்புக்கள் தொடர்பிலேயே சிந்திப்பர். இந்ப் பின்புலத்தில்தான் தான் பதவி விலகப்போவதில்லையென்று ஜனாதிபதியும், தான் பதவி விலகப் போவதில்லையென்னும் நிலைப்பாட்டில் மஹிந்த ராஜபக்ஷவும் இருக்கின்றனர்.

ஏனெனில், அவர்கள் பதவி விலகினால் அடுத்தது யார் என்னும் கேள்விக்கு எதிரணியில் உறுதியான பதில்கள் இல்லை. ரணில் - மைத்திரிபால சிறிசேன ஆட்சியின்போது ஏற்பட்ட குளறுபடிகளே ராஜபக்ஷக்களுக்கு வாய்ப்பளித்தது. அதேபோன்றுதான் இப்போதும் எதிரணிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலைமை ராஜபக்ஷக்களுக்கு ஏதோவொரு வகையில் உற்சாகமளிக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் புதிய அமைச்சரவையுடன் மீளவும் ராஜபக்சக்கள் களமிறங்கியிருக்கின்றனர். இது ஒரு வகையில் கயிற்றின் மேல் நடப்பது போன்றதுதான். ஆனால், நடந்துவிட்டால் அதன் பின்னர் பிரச்னைகளை இலகுவாக எதிர்கொள்ளலாமல்லவா! இதுதான் புதிய அமைச்ரவைக்கு பின்னாலுள்ள திட்டம்.

# காலிமுகத்திடல் மக்கள் எழுச்சியை நியாயப்படுத்திய ஜனாதிபதி!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக தாம் தவறிழைத்துவிட்டதாக ஒப்புக்கொள்ளும் முதலாவது தேசத் தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விளங்குகின்றார்.

புதிய அமைச்சரவையொன்றை நேற்று முன்தினம் அமைத்த பின்னர் உரையாற்றிய போதே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் , பொருளாதார ரீதியாக தாம் விட்டுள்ள தவறுகளை ஏற்றுக்கொண்டுள்ளதன் மூலம் ஆட்சியதிகாரங்களை கையாளுவதில் தமது கையாலாகாத்தனத்தையும் நிரூபித்துள்ளார்.

ஜனாதிபதி தாம் தவறிழைத்தமையை ஒப்புக்கொண்டுள்ள தருணத்திலேயே காலிமுகத்திடலில் அவருக்கெதிராக இடம்பெற்று வருகின்ற மாபெரும் ஆர்ப்பாட்டமும் பத்து நாட்களை கடந்துள்ளது. எத்தகைய இடர்கள் வந்தாலும் ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றும் தமது நோக்கத்திலிருந்து பின்வாங்கப்போவதில்லை என்று காலிமுகத்திடலில் திரண்டிருப்போர் உறுதியாக இருக்கின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது தோல்வியை மட்டும் ஒப்புக்கொள்ளவில்லை. அந்தத் தோல்விக்கான காரணங்களையும் வெளியிட்டுள்ளார். அவற்றில் முக்கியமானதே விவசாயிகள் பாதிப்படையும் விதத்தில் இராசயன உரப்பாவனையை நிறுத்தியதாகும்.

விவசாயமே இந்த நாட்டின் அடிநாதமாக இருக்கின்றதென்பதையும் நீண்ட நெடுங்காலமாகவே இரசாயன உரப்பாவனை விவசாயிகளின் முக்கிய தேவையாக இருக்கின்றமையை அறியாத ஒரு தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இருந்துள்ளார். இலங்கையில் மாத்திரமல்ல. உலகம் அனைத்திலும் இரசாயன உரமே பாவனையிலுள்ளது. அதனோடிணைந்ததாகவே இயற்கை உரப்பாவனை காணப்படுகின்றது.

இதுதவிர, இலங்கை ஒரு நீண்ட கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாடாகும். 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி, விவசாய , கைத்தொழில் அபிவிருத்தி என்பவற்றில் கவனம் செலுத்துவதைவிட அரசியல் பழிவாங்கல்கள் , மற்றும் குடும்ப ஆட்சிக்கு வலுச்சேர்த்தல் போன்றவற்றிலேயே ராஜபக்ஷ குடும்பம் உறுதியாக இருந்ததோடு நாட்டு நலன்களில் அக்கறை காண்பிக்கப்படவில்லை.

இலங்கையின் மத்திய வங்கியில் இருந்த அமெரிக்க டொலர்கள் மில்லியன் கணக்கில் சூறையாடப்பட்டுள்ளதோடு பல முதலீடுகள் உகண்டா உட்பட ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளிலும் ராஜபக்ஷ குடும்பத்தினரால் போடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்த நிலையில் இருக்கின்றது. இதன் வெளிப்பாடாகவே நாட்டின் அனைத்துப் புறங்களிலும் வீதிகள் தோறும் மக்கள் நீண்ட வரிசையில்



அத்தியாவசிய பொருட்களைப்பெற கால்கடுக்க நின்று மரணத்தையும் தழுவும் அபாயகரமான சூழ்நிலைகள் தோன்றியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியைப் பார்க்கும்போது "நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன் நாலாறு மாதமாய் குயவனை வேண்டி கொண்டு வந்தான் ஒரு தோண்டி அதை கூத்தாடி, கூத்தாடி போட்டுடைத்தாண்டி" என்ற நாடோடிப் பாடலே நினைவுக்கு வருகின்றது.

இலங்கையின் பொருளாதாரமும் ராஜபக்ஷ குடும்பத்தின் கூத்தாட்டத்தினால் சீர்குலைந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உரையை மேலும் கூர்ந்து அவதானிக்கும் பட்சத்தில் "வெள்ளம் வந்த பின்னர் அணை கட்ட முயலும்" போக்கில் இருப்பதையே அறிய முடிகின்றது. ஏனெனில், நாணய நிதியத்தை நாட்டின் பொருளாதார நிலவரம் தொடர்பாக முன்னரே நாடியிருக்காமை, மற்றும் இராசாயன உரத்தடை என்பவை தமது தவறான தீர்மானங்கள் என்று ஜனாதிபதி தமது உரையில் கூறியிருந்தார். இந்தத் தவறுகளோடு புத்திஜீவிகளையும் நிபுணத்துவம் கொண்டோரையும் ஒதுக்கிவிட்டு இராணுவ அதிகாரிகளை முக்கிய நிர்வாகப் பொறுப்புகளில் நியமித்தமைகூட தமது தவறு என்பதை ஜனாதிபதி கூறத்தவறிவிட்டார் என்பதையும் அவரின் பேச்சை செவிமடுக்கும்போது அறிய முடிகின்றது.

இந்நிலையில், தமது தவறுகள் பலவற்றை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதை நோக்கும்போது நாட்டின் தலைமைத்துவ பதவிக்கு தாம் தகுதியற்றவர் என்பதை அவர் நாட்டு மக்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பின்னணியில் காலிமுகத்திடலில் கடந்த பத்து தினங்களுக்கும் மேலாக கூடியிருக்கும் மக்கள் ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோருவதை ஜனாதிபதி தாமாகவே நியாயப்படுத்தியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
யாரைப்பற்றியும் குறைகூற வேண்டாம். அதுவே நல்லது. பிறரது நலனுக்காக கூடுதல் பணி செய்வதால் பாராட்டு பெறுவீர்கள்.கடந்த காலத்தவறுகளைத் திருத்திக் கொண்டு பயனடைவீர்கள்.

**இடபம்**
குடும்பத்தினர் உங்களால் பெருமிதம் அடைவார்கள்.பொறுப்புடன் பணியாற்றுவீர்கள். உறவினர் வருகையுண்டு. பக்கத்து வீட்டாரிடம் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருங்கள்.

**மிதுனம்**
நண்பர்களிடம் சில பிரச்னைகளை மனம்விட்டுப் பேசுவீர்கள். உறவினர், நண்பர்கள் உங்களின் வீடு தேடி வருவார்கள்.குடும்பத்தில் ஒருவருக்கு எதிர்பாராத நன்மை ஏற்படும்.

**கடகம்**
உங்களை விட்டு பிரிந்த நண்பர்களிடம் சமாதானம் செய்வீர்கள்.பொறுமையால் கூடுதல் நன்மை கிடைக்கும் நாள். இத்தனை நாளாக சிரமாகத் தெரிந்த ஒரு செயல் இனிமேல் சுலபமாகும்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஒருவரின் ஆரோக்கியம் மேம்படும். நிம்மதியான நாள்.குழந்தைகளால் பெருமை சேரும் நாள்.பக்கத்து வீட்டாரிடமுள்ள எதிர்ப்பு அடங்கி சமாதானமாகும் நாள்.

**கன்னி**
பணியிடத்தில் சாதுர்யமாக செயல்பட்டு பாராட்டு பெறுவீர்கள். பழைய கடனை தீர்க்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும்.

**துலாம்**
பணியாளர்களுக்கு மனதில் இருந்த பயம் நீங்கும். நிம்மதி கூடும்.புது வேலைக்கான நற்செய்தி தேடி வரும். மகிழ்ச்சியான நாள். பிள்ளைகளின் எதிர் காலம் குறித்த கவலை தீரும். மனம் லேசாகும்.

**விருட்சிகம்**
பிறருக்கு உதவி செய்து பெரியோரின் வாழ்த்தை பெறுவீர்கள்.இன்று முதல் பண விஷயத்தில் சிக்கனத்தை கடைப்பிடிப்பீர்கள். விடா முயற்சியால் சில செயல்களை சிறப்புடன் முடிப்பீர்கள்.

**தனுசு**
வியாபாரத்தில் லாபம் ஈட்டுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. வீட்டில் செலவுகளைக் குறைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.கடுமையாக தொல்லை தந்தவர்கள் உங்களை விட்டு விலகும் நாள்.

**மகரம்**
இன்று வாகன வகையில் பராமரிப்பு செலவு ஏற்படும்.எதிர்கால திட்டம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். இயற்கை உணவுகளை எடுத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்**
சமூகத்தில் உங்களின் மதிப்பும், மரியாதையும் உயரும்.இப்போது நீங்கள் எடுக்கும் முடிவுகள் எதிர்காலத்தில் நன்மையை தரும். உடலிற்கு ஒவ்வாத உணவுகளை சாப்பிட வேண்டாம்.

**மீனம்**
குழந்தைகளால் பெருமிதம் அடைவீர்கள். மகிழ்ச்சி கூடும் நாள்.அதிர்ஷ்ட வசத்தால் உங்களுக்கு நன்மை ஏற்படும் நாள். உற்சாகமாக சுபச்செலவுகளை செய்வீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

# யாராலும் திருட முடியாத சொத்து கல்வி ஒன்றுதான்!

## மாணவர்கள் மத்தியில் தமிழக முதல்வர்

சென்னை, ஏப்.20

யாராலும் திருட முடியாத சொத்து கல்வி மட்டும் தான் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



அரச பள்ளிகளில் செயற்பட்டு வரும் பள்ளி மேலாண்மைக்குழுக்களை மறுகட்டமைப்பு செய்வதற்கான விழாவை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும், பள்ளிப் பருவம் திரும்பக்கிடைக்காத மகிழ்ச்சி. மனநிறைவு, மகிழ்ச்சி, கொண்டாட்டம் உடையது பள்ளிப்பருவம். இத்தகைய பள்ளிப்பருவத்தை அனைவரும் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஒரு தலைமுறையில் பெறக்கூடிய கல்வி அறிவானது ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும். உங்களிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாது. திருட முடியாத சொத்து என ஒன்று உண்டு என்றால் அது உங்களின் கல்வி மட்டும்தான். கல்வியை யாராலும் திருட முடியாது. அதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

கல்வி எனும் நீரோடை சீராக செல்ல மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்களின் எண்ணம் ஒரே சீராக இருக்க வேண்டும்.

பெற்றோர் உங்கள் குழந்தைகள் என்னவாகவேண்டுமென விரும்புகிறார்களோ அதற்கு தடைபோடாமல் வழிகாட்டுங்கள், உதவுங்கள். பெற்றோர் தங்களது கனவுகளை பிள்ளைகள் மீது திணித்துவிட வேண்டாம்.


அரச பள்ளிகளில் மாணவர்கள் மகிழ்ச்சியோடும், பாதுகாப்போடும் கல்வி கற்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவது தான் நமது அரசினுடைய நோக்கம்.

பள்ளிகளில் தரமான கல்வியை வழங்குவதிலும், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதும் இந்திய துணைக்கண்டத்திற்கே தமிழகம் ஒரு முன்னோடி மாநிலம்' எனக்குறிப்பிட்டார்.

# தமிழன் அல்லது திராவிடனாக இரு; இளையராஜா விவகாரத்தில் சீமான்

சென்னை,ஏப். 20

"பிரதமர் மோடி குறித்து இளையராஜா கூறியிருப்பது, அவரது தனிப்பட்ட விருப்பம், தனிப்பட்ட கருத்து. அதை ஏற்கிறோமா எதிர்க்கிறோமா என்பது வேறு. அதற்காக இளையராஜாவை விமர்சிக்க வேண்டியது இல்லை. காரணம், இதைவிட புகழ்ந்து பேசியவர்கள் தான் தற்போது இளையராஜாவை திட்டுகின்றனர்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சுட்டிக்காட்டியுள்ளார்.



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சென்னையில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அவர் மேலும், "இளையராஜாவின் தனிப்பட்ட விருப்பம், தனிப்பட்ட கருத்து. அதை ஏற்கிறோமா எதிர்க்கிறோமா என்பது வேறு. அதற்காக இளையராஜாவை விமர்சிக்க வேண்டியது இல்லை. காரணம், இதைவிட புகழ்ந்து பேசியவர்கள் தான் தற்போது இளையராஜாவை திட்டுகின்றனர். இதைவிட பிரதமர் மோடியை புகழ்ந்து பேசிய தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்களே. இவர் மாதிரி ஒரு தலைவர் இல்லை என்று பேசியவர்கள் எல்லாம் உள்ளனர். இளையராஜா அவர் கருத்தை தெரிவித்துள்ளார். அதை விட்டு விட வேண்டியதுதான், அதை பேசிக்கொண்டிருக்க வேண்டியது இல்லை.

கறுப்பு திராவிடன், பெருமைக்குரிய தமிழன் என இரண்டு அடையாளம் கிடையாது. ஒன்று தமிழனாக இரு அல்லது திராவிடனாக இரு. முதலில் அவர்களே குழம்பியுள்ளனர். யார் திராவிடர்? எச்.ராஜா கூறுகிறார், "மோடி கூட திராவிடர், நான் கூட திராவிடர்தான்" என்று. தேவைப்பட்டால் இந்தியன் என்கிறீர்கள், திராவிடன் என்கிறீர்கள், தமிழன் என்கிறீர்கள். ஏன் இத்தனை குழப்பம். எதற்காக இரண்டு மூன்று முகமூடியை போட்டுக் கொள்கிறீர்கள். கடைசியாக நான் தமிழன் என்று கூறினால், இந்த சாதி என கூறுகின்றனர். யுவன் ஷங்கர் ராஜா குழம்ப வேண்டாம், நீ பெருமைக்குரிய தமிழன்.

எங்கள் இனத்தின் நிறம் கறுப்பு. உழைக்கும் மக்களின் தோல் கறுப்பாகத்தான் இருக்கும். உட்கார்ந்து சாப்பிடுகிறவர்கள் தோல்தான் மினுமினுப்பாக வெள்ளையாக இருக்கும். கறுப்பு என்றால் திராவிடன் எனச் சொல்லக் கூடாது. தமிழர்கள் நாங்கள் கறுப்பாக இருக்கக் கூடாதா?" என்று கூறினார்.

# தமிழகத்தில் சிலைகள் கடத்தல்

சென்னை, ஏப்.20

கடந்த 11 மாதங்களில் 141 சிலைகள் கைப்பற்றப்பட்டு, 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



சிலைகடத்தல் தொடர்பான வழக்குகளில் கடந்த 11 மாதங்களில் 141 சிலைகள் கைப்பற்றப்பட்டு, 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேபோல், கடந்த ஆண்டு மே மாதம் முதல் நேற்று வரையிலான காலத்தில் 33 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, 141 சிலைகள் மீட்கப்பட்டதுடன், 44 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய அமைச்சரவைக்கு பேராயர் கடும் எதிர்ப்பு

## கண்துடைப்பு நாடகம் என சாடல்



கொழும்பு, ஏப். 20

"புதிய அமைச்சரவை என்பது மக்களை ஏமாற்றுவதற்கான கண்துடைப்பு நாடகமாகும். எனவே, புதிய அமைச்சரவையை ஏற்றுக் கொள்ள முடியாது." - என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இந்த அரசு பதவி விலக வேண்டும், சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இடைக்கால அரசு அமையவேண்டும் என்பதே மகாநாயக்க தேரர்களின் நிலைப்பாடாக இருந்தது. அதற்குகூட ஜனாதிபதி செவி மடுக்கவில்லை. மக்கள் கோரிக்கையை ஏற்காமல், புதிய அமைச்சரவையை நியமித்துள்ளார். இது தீர்வு அல்ல. மக்களை ஏமாற்றுவதற்கான துண் துடைப்பு வேலை.

அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை எம் மாலும் ஏற்கமுடியாது.

போராட்டக்காரர்களை விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுவருவதாக தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறான ஜனநாயக விரோதச் செயலில் அரசு ஈடுபடக்கூடாது-என்றார். (அ)

# எரிபொருள் விநியோக வரையறைகள் நீக்கம்

கொழும்பு, ஏப். 20

வாகனங்களுக்காக விதிக்கப் பட்டிருந்த சகல எரிபொருள் வரையறைகள் (வாகனங்கள் அடிப்படையிலான உச்ச அளவு) உடன் அமுலாகும் வகையில் நீக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனம் இதனை அறிவித்துள்ளது. எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்துவதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கடந்த வாரம் நடவடிக்கை எடுத்திருந்தது.(அ)

# சாந்த பண்டார சபையில் பேசியபோது வாக்குவாதம்

கொழும்பு, ஏப். 20

எதிர்க்கட்சியின் கூச்சல் குழப்பத்தை அடுத்து பாராளுமன்ற அமர்வை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பாராளுமன்றில் உரையாற்றியபோது எதிர்க்கட்சியுடன் கடும் வாக்குவாதம் இடம் பெற்றது.

இதனை அடுத்தே சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்த சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சாந்த பண்டார இராஜாங்க அமைச்சுப் பதவியை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மக்களுக்கான நிவாரணங்களை வழங்கவே புதிய அமைச்சரவை

## கனக ஹேரத் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 20

புதிய அமைச்சரவையின் நோக்கம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதும் மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதுமாகும் என புதிய நெடுஞ்சாலைகள் அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை, கொஸ்வத்தையில் அமைந்துள்ள மக நெகும மஹமெதுர வளாகத்தில் அமைந்துள்ள அமைச்சின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் ஊழியர்களிடம் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது வரலாற்றில் முதல் முறையாக, நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நேரத்தில், ஒரு அரசாங்கமாக நாங்கள் பல பெரிய சவால்களை எதிர்கொள்கிறோம். அரசாங்கத்தின் முதன்மையான கவனம் நாட்டை முன்னோக்கி வழிநடத்துவது மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பதாகும், மேலும் நாங்கள் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு உழைக்க வேண்டும்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது, புதிய உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவது மற்றும் ஏற்றுமதி செயல் முறையை வலுப்படுத்துவது புதிய அமைச்சரவையின் நோக்கமாகும். இதில் நெடுஞ்சாலைத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எத்தனை சவால்கள் வந்தாலும் வளர்ச்சியையும் முதலீட்டையும் கைவிட முடியாது. எனவே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தேவையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் வெற்றியடைய அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன்-என்றார். (அ)

# இரு மாதங்களுக்கு போதுமான மருந்துகளே நாட்டில் உள்ளன!

## தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம்

கொழும்பு, ஏப். 20

நாட்டில் 20வீதமான அத்தியாவசிய மருந்துகள் மட்டுமே உள்ளன. அத்துடன், தொற்று நோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு நாட்டில் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தனியா மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் சந்திக கங்கந்த இதுபற்றி கூறுகையில்,

டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், மருந்துகளை இறக்குமதி செய்ய முடியவில்லை.

குழந்தைகள், சிறுவர்களுக்கான எதிர்ப்பு சக்தி சிரப்கள் கூட மருந்தகங்களில் கிடைப்பது கடினம். இந்த மருந்து வகை தட்டுப்பாடு முதியவர்களையும் பாதித்துள்ளது.

இதேவேளை, மருந்து விநியோகம் தொடர்பான பிரச்னைகள் குறித்து சுகாதார அமைச்சர் தங்களுடன் பேச வேண்டும் என்றும் அந்தச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# இலங்கையின் கடன் மதிப்பீட்டை குறைத்தது மூடிஸ் நிறுவனம்!

கொழும்பு, ஏப். 20

இலங்கையின் கடன் மதிப்பீட்டை மூடிஸ் நிறுவனம் குறைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடன் கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முடிவைத் தொடர்ந்து மூடிஸ் நிறுவனம் இலங்கையின் இறையாண்மை மதிப்பீட்டை குறைத்துள்ளது. இந்நிலையிலேயே, மூடிஸ் நிறுவனம் இலங்கையின் கடன் மதிப் பீட்டை "சி.ஏ.ஏ2" இலிருந்து "சி.ஏ" ஆகக் குறைத்துள்ளது. (அ)

# 20இற்கு கை உயர்த்தியோர் மன்னிப்பு கேட்கவேண்டும்!

## கோருகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஏப். 20

20 ஐ அகற்றிக்கொண்டு 19 இன் அம்சங்களை உள்வாங்கி 21 ஆம் திருத்ததை கொண்டுவர அரசு இணங்கியுள்ளதாக இன்று கட்சி தலைவர்கள் கூட்டத்தில் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அறிவித்தார். இந்நிலையில் 20ஆம் திருத்தத்துக்கு ஆதரவாக கையை உயர்த்தி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதீத அதிகாரங்களை கொடுத்து, அதை நியாயப்படுத்தியும் பேசிய எம்.பிக்கள், அதே கைகளை உயர்த்தி வாக்களித்த மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டிய நிலைமை இன்று உருவாகிவிட்டது.

இவ்வளவு சீக்கிரம் கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வதிகாரம் வீழும் என இவர்கள் கற்பனையிலும் நினைத்து இருக்கமாட்டார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது:

இன்று பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், 20 ஐ அகற்றவும், 19 இன் அம்சங்களை உள்வாங்கி 21ஆவது திருத்த வரைவு ஒன்றை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவும் அரசாங்கம் தயார் என சபை முதல்வர் தினேஷ் குணவர்தன அறிவித்தார். இதை பிராதன எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அகற்றும் யோசனையும் தனக்கு கிடைத்ததாக சபாநாயகர் கட்சித் தலைவர்களுக்கு கூறினார். எனினும் முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அகற்றப்பட சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டிவரும் என்பதால், அதற்கு நாடு இன்றைய சூழலில் தயார் இல்லை என்பதால், முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தற்சமயம் அகற்ற பெரும்பாலான கட்சித் தலைவர்கள் ஆதரவு வழங்கவில்லை.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அகற்றப்பட்டால், விகிதாசார தேர்தல் முறைமை, 13ஆம் திருத்த மாகாணசபைகள் ஆகியவற்றையும் அகற்றவேண்டி வரும் என சில ஆளும்கட்சி பிரதிநிதிகள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். இவை தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு ஏற்புடைய நிலைப்பாடுகள் இல்லை. தமது நிலைப்பாடும் இதுவே என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் நண்பர் ரிஷாத் பதியுதீன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் நண்பர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் என்னிடம் தெரிவித்தார்கள்-என்றார். (அ)

# எரிபொருள் விலையேற்றத்தால் பஸ் சேவைகள் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஏப். 20

நாட்டின் பல்வேறு இடங்களில் எரிபொருள் விலையேற்றம் காரணமாக தனியார் பஸ் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதனால் பல பிரதேசங்களில் தனியார் பஸ் சேவைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளதுடன், பல பஸ்கள் சேவையில் இருந்து விலகியுள்ளதாக பஸ் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ் உள்ளிட்ட போக்குவரத்து சேவைகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் வருடாந்த பஸ் கட்டண திருத்தம் என்பன அடிப்படையில் குறைந்த பஸ் கட்டணம் 40 ரூபாவரை அதிகரிக்கக்கூடும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் 2 மாதங்களில் வருடாந்த பஸ் கட்டண திருத்தம் இடம்பெறும்.

இதன்போது டீசலின் விலை கவனத்தில் கொள்ளப்பட்டு பஸ் கட்டணம் திருத்தப்படும்.

தற்போதைய நிலை நீடிக்குமாயின் குறைந்த பஸ் கட்டணம் 40 ரூபா வரை அதிகரிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

(அ)

# கோட்டாபய அரசு நாட்டை திட்டமிட்டே அழித்துள்ளது

## சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20

நாடு இன்று எதிர்நோக்கும் நெருக்கடிகள் தொடர்பாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்திருந்த போதிலும் ஆளும் தரப்பு அவை அனைத்தையும் கேலிக்குள்ளாக்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டு நாட்டை அழித்துள்ளது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆற்றிய விசேட உரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிதி மேலாண்மை குறித்து பிரதமர் பேசுகிறார். இதற்கு சர்வதேச சமூகத்திடம் இருந்து நல்ல பதில் கிடைத்துள்ளதாக பிரதமர் கூறுகிறார். சர்வதேச சமூகத்துடனான இந்த ஒப்பந்தம் ஏன் இரண்டு ஆண்டுகளுக்கு முன் செய்யப்படவில்லை என்று பிரதமரிடம் கேட்க விரும்புகிறேன்.

கோடீஸ்வரர்களுக்கு 600 மில்லியன் வரிச்சலுகை வழங்கியதன் மூலம் அரசாங்க வருமானம் 2 வீதம்- 4 வீதம் வரை ஏன் குறைக்கப்பட்டது. ஏன் அந்தக் குற்றத்தைச் செய்தார்? அந்தக் குற்றத்தால்தான் இன்று எரிபொருள் வரிசை, எண்ணெய் வரிசை, பால் பவுடர் வரிசை, மண்ணெண்ணெய் வரிசை, டீசல் வரிசை, அரிசி வரிசை என எல்லா இடங்களிலும் மக்கள் வரிசையில் நிற்கின்றனர்.

இன்று மருந்து இல்லை. இன்று அரசாங்கம் மருந்துகளை கொண்டு வர உலகம் முழுவதும் கெஞ்சுகிறது.

ஆனால் இன்று மருத்துவமனைகளுக்கு நாங்கள் உபகரணங்களை வழங்குகிறோம். இந்த மக்கள் என்ன செய்ய விரும்புகிறார்களோ அதை நாங்கள் அதிகாரம் இல்லாமல் செய்கிறோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும். சில்லறை தீர்வுகளை மட்டும் கொடுக்காதீர்கள். உண்மை பேசுங்கள். பிரதமர் எழுந்து நின்று அறிக்கை செய்தார். எரிவாயு வரிசை எப்போது மறையும் என்பதை எங்களிடம் தெளிவாகக் கூறுங்கள். டீசல் பெட்ரோல் எப்போது கிடைக்கும்? இந்த நாட்டில் தாய்மார்களுக்கு பால் மாவு எப்போது கிடைக்கும்? மின் உற்பத்திக்கு என்ன தீர்வு? என்பதை தயவு செய்து எழுந்து நின்று சொல்லுங்கள்-என்றார். (அ)

# அரசு புதிதாக நியமித்துள்ள அமைச்சரவை பயனற்றது!

## சகல கட்சிகளும் ஒன்றிணைந்து நெருக்கடிக்கு தீர்வு காண கோருகின்றார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஏப். 20

**"அரசு புதிதாக நியமித்துள்ள அமைச்சரவை பயனற்றது. அதேவேளை, அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கான தருணம் இதுவல்ல."**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்சருமான தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.**

ஆகவே பாராளுமன்றத்தில் யாருக்குப் பெரும்பான்மை இருக்கின்றது என்பதைப் பற்றிச் சிந்திக்காது நாடு எதிர்கொண்டிருக்கும் பிரச்னையில் இருந்து எவ்வாறு மீள்வது என்பது பற்றி அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து கலந்து பேசி தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு தற்போது மிக மோசமான காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளது ஆகவே, அரசிடம் மக்களது கேள்விகளுக்குப் பதில் இல்லை என்றே கூற வேண்டும். அதுமாத்திரமன்றி சமகால பிரச்சினைகளோடு நாட்டைக் கொண்டு செல்வதும் கடினமாகும்.

தற்போது எதிர்க்கட்சியினர் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முயற்சித்து வருகின்றனர். இருப்பினும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கான தருணம் இதுவல்ல.

நாடு நிலையான பயணத்தை மேற்கொள்ள வேண்டுமானால் நிறைவேற்று அதிகாரம் இல்லா தொழிக்கப்படவேண்டும் நிறைவேற்று அதிகாரத்தை பாராளுமன்றத்துக்குப் பாரப்படுத்தப்படும் வகையில் அரசமைப்பு ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அனைத்துக் கட்சிகளும் ஒரே மேசையில் அமர்ந்து நாட்டின் சமகால நிலைமைகளை



கலந்துரையாடி ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகளைக் காண்பதற்கு முற்படவேண்டும்.

பாராளுமன்றத்தில் இருக்கின்ற 225 உறுப்பினர்களையும் பதவி விலகுமாறு இளைஞர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று எழும் பட்சத்தில் நாடு நெருக்கடியையே எதிர்கொள்ளும்.

ஆகவே, இப்பிரச்னையை அணுகும் வகையில் அனைத்துத் தரப்பினரும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஏற்றுக்கொள்ளும் வகையிலான சட்ட திருத்தங்களை அமுல்படுத்துவதன் மூலம் பாராளுமன்றத்துக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பாராளுமன்றம் அதிகாரங்களைத் தனதாக்கிக் கொள்ளும் பட்சத்தில் அனைத்து நடவடிக்கைகளும் இயல்பாக முடியும். அத்தோடு பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும்-என்றார். (அ)

# ரம்புக்கனையில் பதற்றம்!





கொழும்பு, ஏப். 20

ரம்புக்கனை பகுதியில் நேற்று முற்பகல் பதற்றமான நிலை ஏற்பட்டது.

எரிபொருள் விலையுயர்வு, பொருட்களின் விலையேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணிகளை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய, வீதிகளில் ரயர்களை எரித்து ரம்புக்கனைப் பகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனை அடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டதால் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. (அ)



# 11 கட்சிகளின் பிரதிநிதிகள் எதிரணி பக்கம் அமர்ந்தனர்

கொழும்பு, ஏப். 20

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் உட்பட 11 கட்சிகளின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் நேற்று எதிரணி பக்கம் அமர்ந்தனர்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போதே மேற்படி உறுப்பினர்கள் எதிரணி பக்கம் அமர்ந்தனர். பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவோம் என 11 கட்சிகள் அறிவித்திருந்தது தெரிந்ததே. (அ)

# சஹ்ரான் ஹாஷிமின் வாகனத்தை பயன்படுத்துகிறார் சரத் வீரசேகர

## சபையில் ஹரீன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாஷீம் பயன்படுத்திய வாகனத்தை முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பயன்படுத்தி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் டுவிட்டரில் வெளியிட்ட பதிவொன்றை சுட்டிக்காட்டியே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிப்பதாகவும், அவ்வாறானதொரு வாகனத்தைத் தான் பயன்படுத்தவில்லை எனவும் சரத் வீரசேகர எம்.பி குறிப்பிட்டார்.

இதனையடுத்து, கருத்து வெளியிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, வழக்கு விசாரணைகளில் இருக்கும் ஒரு வாகனத்தை முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் எவ்வாறு பயன்படுத்தலாம் எனவும் கேள்வி எழுப்பினார்.

இதனையடுத்து சபையில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது. (அ)











# எரிபொருள் விலை உயர்வை எதிர்த்து நாடு முழுவதும் நேற்று போராட்டங்கள்!

கொழும்பு, ஏப். 20

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு எதிராக இலங்கையின் பல பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி, ரம்புக்கனை, ஹிங்குராங்கொட, பத்தேகம, திகன, கம்பளை, இரத்தினபுரி, தெல்தெனிய ஆகிய இடங்களில் போராட்டங்கள் இடம்பெற்றன.

இதேவேளை, ரம்புக்கனை ரயில் பாதையை மக்கள் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதால், அந்த வீதியூடான ரயில் சேவைகள் தாமதமடைந்தன.

மேலும் இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவாக ரம்புக்கனை நகரில் உள்ள பல கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன.

இதேநேரம், அவிசாவளை - கொழும்பு பிரதான வீதியில் கலர் லைட் சந்தி என அழைக்கப்படும் பிரதான சந்தியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் அநுராதபுரம் புதிய பஸ் நிலையத்திற்கு எதிரில் இருந்து பிரதான வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு, கண்டி-மஹியங்கனை வீதி ஊடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது. தெல்தெனிய நகரில் மற்றுமொரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு - காலி பிரதான வீதியை மறித்து காலி நகரில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது போக்குவரத்திற்கு இடையூறாக பஸ்கள் வீதியில் நிறுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம் மாத்தறை நகரிலும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்திருந்த நிலையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருள் விலையை நேற்று அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புதிய அமைச்சர்களில் நான்கு பேர்கூட நேற்று சபைக்கு சமுகமளிக்கவில்லை

### ரணில் விக்கிரமசிங்க விசனம்

கொழும்பு, ஏப். 20

நாட்டின்பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற் காக புதிதாக அமைச்சரவை ஒன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது. ஆனால் அவர்களில் நான்கு அமைச்சர்கள்கூட இன்று பாராளுமன்ற அமர்வில் கலந்துக்கொள்ளாமல் இருப்பது கவலையளிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எம்.பி. தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட ரணில் எம்.பி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை நாட்டின் உர பிரச்னைக்கு என்ன தீர்வு என்பதை முன்வைக்குமாறு பிரதமரிடம் கேட்டுக்கொள்வதாக குறிப்பிட்டார். அத்தோடு, பாராளுமன்ற அனுமதியின்றி பணம் அச்சிடுவதற்கு மத்திய வங்கிக்கு அனுமதி வழங்கவேண்டாம் எனவும் அவர் கோரினார்.

இன்று ஜனாதிபதிக்கு மாத்திரமல்ல 225 பேருக்கும் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். காலிமுகத்திடலில் முன்னெடுக்கும் போராட்டமானது மிகவும் அமைதியான முறையில் இடம்



பெற்று வருகிறது.

போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர், யுவதிகள் ஜனநாயகத்துக்கு உட்பட்டு தங்களது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். அவர்களின் கருத்துக்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும். அவர்களை அழைத்து நாம் அனைவரும் கலந்துரையாடி நம்மிடம் காணப்படுகின்ற பிரச்னைகளை கண்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கு முயற்சிப் போம்-என்றார். (அ)

## 2 மில்லியன் டொலர்களை வழங்கியே இராஜாங்க அமைச்சர்கள் நியமிப்பு

### புதிய தகவலை வெளியிட்டது எதிர்க்கட்சி

கொழும்பு, ஏப். 20

2 மில்லியன் டொலர்களை வழங்கியே புதிய இராஜாங்க அமைச்சர்களை அரசாங்கம் நியமித்துள்ளது என எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

பாராளுமன்றில் நேற்று கருத்து தெரிவிக்கும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

வீடுகளுக்கு சென்று பாராளுமன்ற உறுப்பினர்களை விலைபேசும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக விமல் வீரவன்ஸவும் குற்றச்சாட்டை



முன்வைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையிலேயே தமக்கு குறித்த தகவல் கிடைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சபையில் தெரிவித்தார்.

(அ)

# இந்தியாவில் விளிம்பு நிலை மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவாக இருப்பது ஏன்?

சராசரியாக இந்தியாவில் பிறக்கும் ஒரு குழந்தை 69 வருடங்கள் வரை உயிர் வாழும். இது உலக சராசரியை காட்டிலும் மூன்று வருடங்கள் குறைவு.

ஆனால் இந்தியாவில் உள்ள மனிதர்களின் ஆயுட்காலம் வெவ்வேறு சமூகங்களுக்கு இடையே மாறுபட்டதாக உள்ளது என்கின்றன இரண்டு புதிய ஆய்வுகள்.

இந்தியாவில் விளிம்பு நிலையில் இருக்கும் பழங்குடியின மக்கள், தலித்துகள் மற்றும் முஸ்லிம்கள், சாதி இந்துக்களைக் காட்டிலும் இளம் வயதில் உயிரிழக்கின்றனர் என சங்கிதா வ்யாஸ், பாயல் ஹாதி மற்றும் ஆஷிஷ் குப்தா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தரவுகள் தெரிவிக்கின்றன.



இந்த ஆய்வாளர்கள் ஒன்பது இந்திய மாநிலங்களிலிருந்து இரண்டு கோடிக்கும் அதிகமான மக்களின் சுகாதார கணக்கெடுப்பை ஆராய்ந்தனர். பின் சாதி இந்துக்களின் ஆயுட்காலத்துடன் ஒப்பிடும்போது பழங்குடியின மக்களின் ஆயுட்காலம் நான்கு வருடங்கள் குறைவாகவும், தலித்துகளின் ஆயுட்காலம் மூன்று வருடங்கள் குறைவாகவும் உள்ளது. இதுவே முஸ்லிம்களின் ஆயுட்காலம் ஒரு வருடகாலம் குறைவாகவுள்ளது என கண்டறிந்தனர்.

## சரி இதை பாலின ரீதியாக ஆராய்வோம்

பழங்குடியின பெண்களின் ஆயுட்காலம் 62.8 வருடங்கள், தலித் பெண்களின் ஆயுட்காலம் - 63.3 வருடங்கள் மற்றும் முஸ்லிம் பெண்களின் ஆயுட்காலம் 65.7. இதுவே சாதி இந்து பெண்ணின்



சராசரி ஆயுட்காலம் 66.5 வருடங்களாக உள்ளது.

ஆண்களுக்கென பார்த்தால், பழங்குடியின ஆண்கள் - 60 வருடங்கள், தலித்துகள் - 61.3 வருடங்கள், முஸ்லிம்கள் - 63.8 வருடங்கள். ஆனால், சாதி இந்து ஆணின் சராசரி ஆயுட்காலம் 64.9 வருடங்களாக உள்ளது.

ஆயுட்காலத்தில் உள்ள இந்த இடைவெளியை, அமெரிக்காவில் வெள்ளை மற்றும் கருப்பின மக்களுக்கு இடையே உள்ள ஆயுட்கால இடைவெளியோடு ஒப்பீடு செய்யலாம்.

மருத்துவ வசதிகள், சுத்தம் மற்றும் பொது சுகாதாரம் ஆகிய காரணங்களால் இந்தியாவின் சராசரி ஆயுட்காலம் கூடியுள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு 50களில் இருந்த ஆயுட்காலம் இப்போது 20 வருடங்கள் கூடியுள்ளன.

ஆனால் இதில் வருத்ததிற்குரிய செய்தி என்னவென்றால், அனைத்து சமூக மக்களின் ஆயுட்காலமும் அதிகரித்திருந்தாலும், வெவ்வேறு சமூக மக்களின் ஆயுட்காலத்தில் உள்ள வித்தியாசம் அதிகரித்துள்ளது என்கிறது ஆஷிஷ் குப்தா மற்றும் நிகில் சுதர்சனம் ஆகியோரால் இணைந்து நடத்தப்பட்ட மற்றொரு ஆய்வு.

தலித் ஆண் மற்றும் சாதி இந்து ஆணின் ஆயுட்காலத்தில் உள்ள இடைவெளி 90களின் பிற்பகுதியிலிருந்து 2010ஆம் ஆண்டின் இடைக்கால பகுதி வரை அதிகரித்துள்ளது. முஸ்லிம்களின் ஆயுட்காலம் என்று வந்தால், 1997 - 2000 கால கட்டத்தில் குறைந்து இருந்த ஆயுட்கால வித்தியாசம், கடந்த 20 வருடங்களில் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் சமூக ரீதியாக அதிகப்படியான விளிம்புநிலை மக்கள் வாழ்கின்றனர். இங்கு 12 கோடி பழங்குடியின மக்கள், இந்தியாவின் தொலைதூர பகுதிகளில் மோசமான வறுமையில் வாழ்கின்றனர். அரசியல் மற்றும் சமூக ரீதியாக மேம்பட்டுள்ள சமயத்திலும் 23 கோடி தலித் துகள் இன்னும் தீண்டாமையை எதிர கொண்டு வருகிறார்கள். அதேபோல 20 கோடி முஸ்லிம்கள் வகுப்புவாத கலவ ரங்களில் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

## இதற்கான காரணங்கள் என்ன?

இதை ஆராய்ந்தபோது சில சுவாரஸ்யமான காரணங்கள் வெளிவந்துள்ளன. ஒருவர் எங்கு வாழ்கிறார், அவரின் சொத்து என்ன, எந்த சூழலில் வசிக்கிறார் ஆகிய காரணங்கள் இந்த இடைவெளியில் பாதிக்கும் குறைந்த அளவில்தான் உள்ளது.

சொத்தின் அடிப்படையில் பார்த்தால் சாதி இந்துக்களை காட்டி லும் தலித்துகள் மற்றும் ஆதி வாசிகள் குறைந்த ஆண்டு களே வாழ்கின்றனர் என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இறப்பு விகிதத்தில் தீண்டாமை எவ்வாறு பங்காற்றுகிறது என்பதை கண்டறிய இந்தியாவில் மேலும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இருப்பினும் சில ஆதாரங்கள் நமக்கு இதுகுறித்து விளக்குகின்றன. முஸ்லிம்கள், ஆதிவாசி மற்றும் தலித்துகளை காட்டிலும் அதிக நாட்கள் வாழ்கின்றனர். இது அவர்களின் குழந்தைகள் திறந்த வெளியில் மலம் கழிக்கும் சூழலில் இல்லாத நிலை, பெண்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் விகிதம் குறைவு, குறைந்த அளவிலான மதுபான பழக்கம் மற்றும் தற்கொலை சூழல்கள் குறைவு ஆகிய காரணங்கள் இதற்கு பங்களிக்கின்றன.

அதேபோல பள்ளி மற்றும் அரசு அலுவலகங்களில் பாகுபாட்டை சந்திக்கும் மக்களின் உடல் நலம் மற்றும் மன நலம் பாதிக்கப்படுகிறது. இதனால் மன அழுத்தம் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன. அதேபோல தரமான சுகாதார வசதி மற்றும் கல்வி ஆகியவை குறைந்த அளவில் கிடைப்பதும் ஒரு காரணம்.

விளிம்பு நிலையில் இருக்கும் மக்கள்தான் சுகாதாரப் பணியாளர்களாக பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு பணி காரணமாக நோய் ஏற்படக் கூடிய சூழல் அதிகம் ஏற்படுகிறது. பொருளாதார சமமின்மையை மட்டும் நீக்குவது இதில் போதாது. சமூக பாதகங்களை களையும் தீவிர சுகாதார தலையீடுகளும் வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக் கின்றனர்.

ஆயுட்காலத்தில் வித்தியாசங்கள் இருப்பது இந்தியாவில் மட்டுமல்ல. இந்த நிலை அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டனிலும் உள்ளது.

ஆனால் இந்தியாவை பொறுத்த வரை தீண்டாமை உடல்நலத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை ஆராய மேலும் தரவுகள் வேண்டும். ஒவ்வொரு வருடமும் உயிரிழக்கும் 1 கோடி பேரில் 70 லட்சம் பேருக்கு மருத்துவ ரீதியிலான சான்றிதழ்கள் இல்லை. அதேபோல 30 லட்சம் பேரின் இறப்பு பதிவு செய்யப்படுவதில்லை. அதேபோல சுகாதார அமைப்புகளுக்கு இடையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டும். அதேபோல விளிம்புநிலை மக்களுக்கான சுகாதார சேவையை மேம்படுத்த வேண்டும். [பிபிசி]

**தலித் ஆண் மற்றும் சாதி இந்து ஆணின் ஆயுட் காலத்தில் உள்ள இடைவெளி 90களின் பிற்பகுதியிலிருந்து 2010ஆம் ஆண்டின் இடைக்கால பகுதி வரை அதிகரித்துள்ளது. முஸ்லிம்களின் ஆயுட் காலம் என்று வந்தால், 1997 - 2000 கால கட்டத் தில் குறைந்து இருந்த ஆயுட்கால வித்தியாசம், கடந்த 20 வருடங்களில் அதிகரித்துள்ளது.**



# இலங்கை: அடுத்தது என்ன?

- தினேசா சமரரத்ன

(நேற்றைய தொடர்ச்சி...)

இலங்கை அரசியல் யாப்பு ஜனநாயகத்தின் கோளாறுகளுக்கு நிறைவேற்று ஜனாதிபதி முறை ஏன் மூல காரணமாக இருந்து வருகின்றது என்ற விடயம் குறித்து நிறையவே எழுதப்பட்டுள்ளது. பொருளா தார அபிவிருத்தி மற்றும் உறுதிப்பாடு என்பன எங்கள் ஜனாதிபதி முறையின் உயரிய குறிக்கோள்களாக இருந்து வருவதாகக் கருதப்பட்டது. ஆனால், 40 ஆண்டுகளின் பின்னர் வரலாறு காணாத ஒரு நெருக்கடியில் நாங்கள் தள்ளப்பட்டிருக்கின்றோம். சரியாக சொல்லப் போனால், இது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு நெருக்கடியாகும். ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விடயம் தொடர்பாக இன்னும் எவருக்காவது சந்தேகமிருந்தால், ஜனாதிபதிகளால் மீண்டும் மீண்டும் எவ்வாறு நீதித் துறையின் சுயாதீனம் குலைக்கப்பட்டுள்ளது என்ற விடயத்தை அவர்கள் வாசிக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். அதன் ஊடாக அவர்கள் முன்னெடுத்த அதிகார துஷ்பிரயோகங்களையும், மன்னிப்பு வழங்குவது தொடர்பாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அண்மையில் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தன என்பதனையும், ஓய்வுபெறும் ஜனாதிபதிகள் தமக்குரிய ஓய்வு அனுகூலங்களை எவ்வாறு பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதனையும் ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பாக சந்தேகங்களை கொண்டிருப்பவர்கள் சற்றுப் பார்க்க வேண்டும்.

எமது நிறைவேற்று ஜனாதிபதிகளின் கடந்த காலச் சாதனைகள் அரசியல் யாப்பு ரீதியான ஆட்சியைப் பொறுத்தவரையில் மிக மோசமானவையாகவே இருக்கின்றன. இதற்கு பல காரணங்கள் இருந்துபோதிலும், அவற்றை இங்கு நான் விரிவாக எடுத்துக் கூறப் போவதில்லை. அந்த நிலையில், நிறைவேற்று ஜனாதிபதியின் அத்துமீறல்களை அரசியல் யாப்புக்கு ஊடாக கட்டுப்படுத்த முடியாத நிலைமை இருந்து வந்துள்ளது. இலங்கை அரசியல் யாப்பு, ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டை கோட்பாட்டு ரீதியில் கொண்டுள்ளது (உறுப்புரை 30 தொடக்கம் 40). பின்வரும் நிலைமைகள் உருவாகியிருப்பதாகக் கூறி நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையை நிறைவேற்றி வைப்பதன் மூலம் அந்த நடை முறையை தூண்டி விட முடியம்: ஜனாதிபதி தனது அலுவலகக் கருமங்களை நிறைவேற்றி வைக்கும் விடயத்தில் நிரந்தர இயலாமையைக் கொண்டுள்ளார் அல்லது அரசியல் யாப்பை வேண்டுமென்றே மீறுதல், தேசத் துரோகம், ஊழல், ஜனாதிபதிப் பதவியை துஷ்பிரயோகம் செய்தல் என்பவற்றை அவர் இழைத்துள்ளார் அல்லது ஒழுக்கச் சீர்குலைவு தொடர்பான குற்றச் செயலை இழைத்துள்ளார் என்ற அடிப்படையில் அதனை மேற்கொள்ள முடியும். உண்மையில் இதுவே தற்போதைய நிலையாக இருக்கின்றது என பலர் வாதிட முடியும். எவ்வாறிருப்பினும், அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் விசாரணை நடத்தி, ஒரு முடிவுக்கு வர வேண்டும். உச்ச நீதிமன்றம் இதற்கு உடன்படும் விதத்தில் அதன் முடிவை வெளியிட்டால் நாடாளுமன்றம் ஒரு பிரேரணையின் மூலம் ஜனாதிபதிக்கு எதிராக ஒரு குற்றப் பிரேரணையை கொண்டு வர முடியும். இது கொள்கை ரீதியில் சாத்தியமானதாக இருந்தாலும் கூட, இந்த வழிமுறையை முன்னெடுப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும் (உண்மையிலேயே அவ்வாறு நீண்ட காலம் எடுக்க வேண்டும்).

அரசியல் யாப்பின் மூலம் வழங்கப்பட்டிருக்கும் மற்றொரு தெரிவு இராஜினாமா செய்வதாகும். 'சபாநாயகரிடம் தனது கைப்பட இராஜினாமாக் கடிதத்தை எழுதிக் கொடுப்பதன் மூலம்' ஜனாதிபதி அவ்வாறு இராஜினாமா செய்ய முடியும். இது உடனடியாக அமுலுக்கு வரும். அந்த வெற்றிடம் நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் பூர்த்தி செய்யப்படுவதுடன், அவர் எஞ்சியுள்ள பதவிக் காலம் வரையில் பதவி வகிப்பார் (உறுப்புரை 40(1)).

இந்த இரு தெரிவுகளில் தற்போதைய சூழ்நிலையில் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் தெரிவு, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விடயத்திற்கு ஜனாதிபதி தலைமைத்துவத்தை வழங்கி, அதன் பின்னர் இப்பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாகும். அதன் மிகப் பாரதூரமான, சீர்குலைவுகளை எடுத்து வரக் கூடிய இந்த நெருக்கடியை இலங்கை ஒரு புதிய ஆரம்பத்துடன் கையாள முடியுமென நாட்டுப் பிரஜைகளாகிய நாங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமானால், நாங்கள் எமது அரசாங்கத்தின் மீது உயர் மட்டத்திலான நம்பிக்கையை கொண்டிருத்தல் வேண்டும். பொது மக்கள் மத்தியிலான அத்தகைய ஒரு நம்பிக்கை உருவாக்கப்பட வேண்டுமானால் தற்போதைய அரசியல் தலைமைத்துவம் மாற்றமடைய வேண்டும். குறைந்தது அந்தக் காரணத்திற்காவது தற்போதைய அரசியல் தலைமைத்துவம் மாற்றமடைதல் வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டால் புதிதாக கொண்டுவரப்படும் முறை எந்த வகையானதாக இருக்க முடியும்? இது தொடர்பான விபரங்கள் மிகவும் கவனமான விதத்தில் உருவாக்கப்படுதல் வேண்டும். எனினும், அது நாடாளுமன்ற ஜனநாயகமாக இருந்து வருவதுடன், அநேகமாக சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் இருந்த முறைக்கு இணையானதாக இருக்க வேண்டும். பிரதமர் அமைச்சரவைத் தலைவராக இருப்பதுடன், ஜனாதிபதி பெயரளவில் அப்பதவியை வகித்து வருவார். அரசியல் யாப்பு பேரவை, சுயாதீன ஆணைக்குழுக்கள் முதலியவை அந்தத் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட முடியும். இந்த முறையின் அனுகூலங்கள் எவை? அமைச்சரவையின் தலைவர் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டியவராக இருப்பது மட்டுமன்றி, அவர் நாடாளுமன்றத்திலும் இருக்க வேண்டும். தலைமைத்துவம் ஒரு தனிநபர் மீது ஒன்றுதிரண்டிக்காது கூட்டுத் தலைமைத்துவமாக இருக்கும். நாடாளுமன்ற முறையின் முக்கியமான பிரதிகூலம் அரசாங்கங்கள் நிலையற்ற தன்மைகளை எதிர்கொள்வதாகும். எவ்வாறிருப்பினும், இந்த முறை அரசியல் யாப்பு ரீதியான ஆட்சிக்கான ஒரு சிறந்த கட்டமைப்பை உருவாக்குவதுடன், அதிகார துஷ்பிரயோகத்திற்கான வாய்ப்புக்களை குறைக்கிறது. உள்நாட்டில் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் ('எதேச்சதிகார இயல்பிலான') முதலாவது குடியரசு யாப்புக்கு மாறான விதத்தில் சோல்பரி அரசியல் யாப்பு சுயாதீனமான ஒரு அரசாங்க சேவைக்கான ஏற்பாட்டையும் கொண்டிருந்தது. உண்மையில் சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் ஆட்சி செய்வது என்பது பெருமளவுக்கு பிரச்சினைக்குரியதாக இருந்தது என்பதனை நாங்கள் அறிவோம்: 1956ஆம் ஆண்டின் சிங்கள மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை இதற்கான மிகச் சிறந்த உதாரணம். ஆனால், ஓர் அரசியல் அமைப்பு வடிவமைப்பின் வரையறைகளை அந்த இடத்திலே நாங்கள் புரிந்து கொள்கின்றோம். அந்தத் தூரம் வரையில் மட்டுமே அது எம்மை எடுத்துச் சொல்ல முடியும். அதற்கு அப்பால் செல்ல வேண்டுமானால் மக்கள் (தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும்) மற்றும் நிறுவனங்கள் (அரச நிறுவனங்கள், சமய அமைப்புக்கள், பாடசாலைகள் முதலியவை) தமது வகிபாகத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும். நாங்கள் அதனைச் செய்யும் பொழுது, இதுவரையில் சாத்தியமற்றது எனக் கருதப்பட்ட விடயங்கள் சாத்தியமாகும். இலங்கையின் இந்தத் தருணத்தில் அந்தப் பாடத்தையே நாங்கள் எல்லோரும் கற்று வருகின்றோம்.

மற்றொரு விடயமும் இங்கு தெளிவுபடுத்தப்படுதல் வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக எமக்கு ஒரு சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படுகின்றதா? இதற்கு சாத்தியமான இரு பதில்கள் உள்ளன. இந்தப் பிரச்சினை தொடர்பாக இதுவரையில் முன்வைக்கப்பட்டிருக்கும் உச்ச நீதிமன்றத்தின் முடிவுகளை நாங்கள் கவனத்தில் எடுத்தால் "ஆம், அதற்கு நாங்கள் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்" என்று தான் கூறுவோம். இந்தக் கேள்வி இன்று மக்களிடம் முன்வைக்கப்பட்டால் இந்தப் பதவியை ஒழிக்கும் விடயத்திற்கு மக்கள் உடன்படுவார்கள் என நான் நினைக்கிறேன். உண்மையிலேயே அத்தகைய ஒரு சர்வஜன வாக்கெடுப்பு செலவு கூடியதாகவும், அதிக காலத்தை எடுக்கக்கூடியதாகவும் இருந்தாலும் கூட, மக்களுடைய ஒப்புதலைப் பெற்றுக்கொள்வது அரசியல் ரீதியில் விரும்பத்தக்கதாக இருக்கும் என நான் வாதிடுகிறேன். இதற்கான மற்றைய பதில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் ஒப்புதல் இதற்குத் தேவையில்லை என்பதாகும். நிறைவேற்று ஜனாதிபதி முறையை உருவாக்கும் உறுப்புரை மிக இறுக்கமானதாக இருந்து வரவில்லை (அதாவது, அது திருத்தப்படும் பொழுது அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் ஒப்புதல் பெற வேண்டிய அவசிய மில்லை). எனவே, சட்ட ஏற்பாடு களை வாசித்துப் பார்க்கும் பொழுது, ஜனாதிபதி முறையை நாடாளுமன்றத்தில் 2/3 உறுப்பினர்கள் அதற் குச் சாதகமாக வாக்களிப்பதன் மூலம் ஒழிக்க முடியும். அரசியல் யாப்பு நிறைவேற்று ஜனாதிபதி முறையை வேரூன்றச் செய்யும் இயல்பைக் கொண்டிராது விட்டாலும் கூட, பல ரின் அரசியல் கற்பனையில் - குறிப்பாக, உச்ச நீதிமன்றத்தில் பொருள் கோடலில் - அது அவ்விதமே நோக் கப்பட்டு வருகிறது. ஆனால், கோட்பாட்டு ரீதியில் இரு பக்கங்களிலும் நின்று இது தொடர்பாக வாதாட முடியும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை இப்பொழுது ஒழிக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்தாக இருக்கும் அதே வேளையில், அரசியல் பேச்சுவார்த்தைகள் மற்றும் உச்ச நீதிமன்றம் என்பன அதற்கான சாத்தியப்பாட்டிற்கு இடமளிக்காதிருப்பின், 2018ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட 20ஆவது வரைவுத் திருத்தம் முன்னோக்கிய பயணத்திற்கான ஒரு வரைவை வழங்க முடியும். இந்த உத்தேசத் திருத்தம் ஜனாதிபதி நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட வேண்டுமென்ற ஏற்பாட்டைக் கொண்டிருந்தது. இந்தத் திருத்தம் உத்தேசிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 19ஆவது திருத்தம் அமுலில் இருந்தது. இன்று இந்தப் பாதையில் திரும்பிச் செல்வதற்கு நாடாளுமன்றம் 2015ஆம் ஆண்டின் 19ஆவது திருத்தத்துடன், 2018இல் உத்தேசிக்கப்பட்ட 20ஆவது திருத்தத்தையும் சேர்த்து, 19ஆவது திருத்தம் மற்றும் யோசனை என்பவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டும். இந்த நிலையில், ஜனாதிபதி (நேரடியாக மக்களிடமிருந்து அல்லாது) நாடாளுமன்றத்திலிருந்து தனது பணிப்பாணையை பெற்றுக்கொள்ளும் ஒரு அரசியல் யாப்பு முறையை நாங்கள் கொண்டிருப்போம். அப்பொழுது ஜனாதிபதி குறைந்த அதிகாரங்களுடன் செயற்பட்டு வருவார். இந்தப் பின்னணியில், ஏனையவற்றுக்கு மத்தியில் நியதிபூர்வமான ஆணைக்குழுக்கள் மற்றும் பகிரங்க நிறுவனங்கள் என்பன சுயாதீனமாக செயற்படும். இந்தத் திட்டத்தில், அரசின் நிறைவேற்றுப் பதவி என்ற உச்ச மட்டத்தில் ஒரு தனிநபருக்கு பரலான தற்துணிபு அதிகாரங்களை மறுக்கும் குறிக்கோளுக்கு நாங்கள் மிக அருகில் இருக்கின்றோம்.

எம்மை மீண்டும் சுற்று வட்டங்களுக்கு எடுத்துச் செல்லும் ஒரு பாதையை அல்லாமல், இந்த நெருக்கடியிலிருந்து வெளியில் எடுத்து வரக் கூடிய ஒரு பாதையை இலங்கை தெரிவு செய்ய வேண்டும். சங்கீதக் கதிரை விளையாட்டு எமக்குத் தேவையில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்கள் தாம் சுயநல அக்கறையுடன் செயற்படுபவர்கள் என்பதனை மீண்டும் ஒரு முறை நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். மக்கள் தன்னியல்பிலான ஒரு அரசியல் இயக்கத்தை உருவாக்கியிருக்கின்றார்கள். இந்த நெருக்கடிக்கான ஒரு தீர்வை அவர்கள் கோரி நிற்பதுடன், நபர்கள் மாற்றப்பட வேண்டும் எனவும் கோருகிறார்கள். எனது அபிப்பிராயத்தில் ஒரு கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை கொண்டு வந்தால் மட்டுமே எம்மால் அதனை சாத்தியப்படுத்திக் கொள்ள முடியும். நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது, அந்தக் கட்டமைப்பு மாற்றத்தின் மையமாக இருந்து வருதல் வேண்டும். ஹிட்லரை கடுமையாக விமர்சிப்பவராக இருந்து வந்த ஜேர்மனிய சமய அறிஞர் டீட்ரிச் போன் ஹோபர் இப்படிச் சொல்லியிருக்கிறார்: "நீங்கள் பிழையான ரயில் வண்டியில் ஏறியிருந்தால், ரயில் பெட்டிக்குள் எதிர்திசையில் ஓடிக் கொண்டிருப்பதில் எந்தப் பிரயோசனமுமில்லை." இலங்கையில் இன்று நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்கான முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்கு இந்த மேற்கோள் உதவியாக இருகக்கும்.


ரயில் வண்டி வேகத்தை குறைத்துக் கொண்டிருப்பது போல் தெரிகிறது. ஆனால், இன்னமும் அது தனது பயணத்தை மேற்கொள்ள முயல்கின்றது. நாங்கள் ரயில் பெட்டிக்குள் எதிர்திசையில் ஓடிக்கொண்டிருக்கும் காரியத்தையே செய்து கொண்டிருக்கிறோம். அந்த ரயில் வண்டியிலிருந்து கீழே இறங்கி, ஏறுவதற்கு மிகவும் உசிதமான ரயில் வண்டியை நாங்கள் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

(கிறவுண்விவ்ஸ் தளத்தில் "What is Next?" என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம். நன்றி: மாற்றம்)

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..............................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ...........    ii) 18, 15, 12, ............., ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.............................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

.........................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3l 300ml பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

.........................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..............................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

...............................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



...................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

...................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)    2)    3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி   2) இரணைமடுக்குளம்   3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டி எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்   2) உதிப்பு   3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்   2) வாளேந்திய சிங்கம்   3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976   2) 1851   3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு   2) இறப்பர், தாழம்பூ   3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6   2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130   2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 1l 100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190   2) 100   3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1
**31.** 2
**32.** 3
**33.** 2
**34.** 3
**35.** 2

கல்வி tv CHANNEL-1

**20.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**20.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மாலையர்கட்டு அ. த. கவில் தரம் 1 மாணவர் வரவேற்பு!



பட்டிருப்பு, ஏப். 20

தரம் 1 மாணவர்களை 2022 ஆம் கல்வியாண்டுக்கு வரவேற்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்புக்கு தெற்கே சுமார் 60 கிலோ மீற்றர் தொலைவில் பட்டிருப்பு கல்வி வலயத்தின் போரதீவு கோட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் உள்ள மாலையர்கட்டு அ. த. க. பாடசாலையில் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நடைபெற்றது.

அதிபர் எஸ். தேவகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பா. வரதராஜன்கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்துடன் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களும் விழாவில் இணைந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தரம் 1 மாணவர்களுக்கு பூமாலை அணிவித்து, இனிப்புகள் வழங்கப்பட்டு பாடசாலையில் அன்புடன் வரவேற்கப்பட்டனர்.

# வவுணதீவு கோப் நிலையத்தில் தீ சகல பொருட்களும் எரிந்து நாசம்!

மட்டக்களப்பு, ஏப். 20

**வவுணதீவில் அண்மையில் திறந்துவைக்கப்பட்ட கோப் விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட தீ காரணமாக அங்கிருந்த பொருட்கள் அனைத்தும் எரிந்து நாசமாகின.**



நேற்று முன்தினம் மாலை குறித்த விற்பனை நிலையம் மூடப்பட்ட பின்னர் தீபரவல் ஏற்பட்டதை தொடர்ந்து வவுண தீவு பொலிஸாரும் மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதன்போது, குறித்த வர்த்தக நிலை யத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டி ருந்த பொருட்கள் மற்றும் வர்த்தக நிலையத்திலிருந்த இலத்திரனியல் பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்து சாம்பலாகின வென வவுணதீவு பொலிஸார் தெரிவித்த னர்.

இது தொடர்பில் வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட் டின் அடிப்படையில் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தீ பரவல் சம்பவமானது மின் ஒழுக்கா அல்லது வேறு காரணங்கள் ஏதுவும் உள்ளதா என்பது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ காரணமாக குறித்த வர்த்தக நிலையத்திற்கு சுமார் 20 இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையில் மக்களுக்கு மிகவும் விலை குறைந்த நிலையிலேயே பொருட்களை வழங்கிவந்ததாக ஈச்சந்தீவு-கன்னங்குடா பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் நாகலிங்கம் உருத்திரமூர்த்தி தெரிவித்தார்.

# எரிபொருளை சட்டவிரோதமாக பதுக்கி வைத்தால் நடவடிக்கை

மட்டக்களப்பு, ஏப். 20

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் எரிபொருளை சட்ட விரோதமாக பதுக்கி வைத்திருப்பவர்களை கைது செய்வதற்கு திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதி காரி, பிரதான பொலிஸ் பரி சோதகர் எஸ். எம். சதாத் தெரி வித்தார்.

இச் சோதனையின்போது கைப்பற்றப்படும் எரிபொருள் அரச உடமையாக்கப்படுவதுடன், உரிய நபருக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தொடர்ச்சியாக மக்களின் நீண்ட வரிசை காணப்படுகின்றது. இதற்கு காரணம் சிலர் எரிபொருளை தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்து பதுக்கி வைப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு எரிபொருள் பதுக்கி வைத்திருப்போர்கள் சம்பந்தமாக பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அன்னை பூபதியை நினைவேந்த 11 பேருக்கு எதிராக தடை உத்தரவு

மட்டக்களப்பு, ஏப். 20

இரண்டு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அன்னைபூபதியை நினைவுகூர 11 பேருக்கு மட்டக்களப்பு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் 1987 மார்ச் 19ஆம் திகதி உண்ணாவிரதத்தை ஆரம்பித்த அன்னை பூபதி அவரின் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் ஏப்ரல் 19ஆம் திகதி உயிரிழந்தார். இவரின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்னெடுக்கப் படவிருந்தது.

இந்நிலையில், இந்த நிகழ்வை முன்னெடுக்க மட்டக்களப்பு பொலிஸார் நீதிமன்றம் ஊடாக, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா. சாணாக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், சீ. யோகேஷ்வரன், ஞா.ஸ்ரீநேசன், மாநகர முதல்வர் தி.சரவணபவான், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இ.பிரசன்னா, இலங்கை தமிழரசுக் கட்சி வாலிபர் அணித் தலைவர் கி.சேயோண், மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் அணித் தலைவர் லோ.திபாகரன், சிவில் அமைப்பு தலைவர் ச.சிவயோகநாதன், வாழைச்சேனை குணசேகரம் ஆகிய 11, பேருக்கு எதிராக தடை உத்தரவு பெற்றனர்.

# வவுணதீவில் புதையல் தோண்டிய நால்வர் பொலிஸாரினால் கைது!

மட்டக்களப்பு, ஏப். 20



மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள இரட்டைச் சோலைமடு பிரதேசத்தில் பண்ணை ஒன்றில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட பகுதியை பொலிஸார் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை முற்றுகையிட்டனர். இதன்போது 4 பேரை கைது செய்ததுடன் ஒருவர் தப்பி ஓடியுள்ளதாகவும் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய துளையிடும் கருவி உட்பட உபகரணங்களை மீட்டுள்ளதாகவும் வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த அப்புகாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து வவுணதீவு பொலிஸ் நிலையப் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸா ருடன் விசேட புலனாய்வு பிரிவினரும் இணைந்து நேற்று முன் தினம் மாலை குறித்த பண்ணை பகுதியை முற்றுகையிட்டனர்.

இதன்போது புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் தப்பி ஓடியதுடன் 4 பேரை கைது செய்யப் பட்டனர். இவர்களிடமிருந்து துளையிடும் கருவி மற்றும் மின் உபகரணங்கள் மீட்கப்பட்டன.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் 28 ,55,48, 43, வயதுடையவர்கள் எனவும் இவர்கள் அம் பாறை மத்தியமுகாம் 11ஆம் கொலனி, மட்டு புதுக்குடியிருப்பு, வவுணதீவு கண்ணகிபுரம், போரதீவு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தப்பி ஓடிய பிரதான சூத்திரதாரி கல்லடி பிரதே சத்தைச் சேர்ந்தவர் எனவும், கைது செய்யப்பட் டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதி காரி தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மட்டக்களப்பு பாடசாலைகளில் தரம் 1 மாணவர்கள் வரவேற்பு!



மட்டக்களப்பு, ஏப். 20

2022ஆம் ஆண்டுக்கான அரச பாடசாலைகளில் தரம் ஒன்றில் மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் நேற்றுக் காலை மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நேற்று காலை முதலாம் தரத்திற்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைமுனை கனிஸ்ட வித்தியாலயத்தில் தரம் ஒன்றிற்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் தம்பிராசா அருமைத்துரை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலயத்தின் உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி உமாவதி விவேகானந் தம், ஆங்கில கல்வி இணைப்பாளரும் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் திருமதி விக்னேஸ்வரி மகேஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


நேற்று சுமார் 160 மாணவர்கள் முதலாம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டனர். அவர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு இரண்டாம் தர மாணவர்களினால் வரவேற்பளிக்கப்பட்டனர்.

அதனை தொடர்ந்து புதிய மாணவர்களை வரவேற்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றதுடன் பெற்றோர் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

# தென் ஆபிரிக்காவில் இயற்கைப்பேரிடர்

## தேசிய பேரழிவு நிலை அறிவிப்பு!





ஜோகன்னஸ்பர்க், ஏப்.20

தென் ஆபிரிக்காவில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்பை அடுத்து தேசிய பேரழிவு நிலையை அந்நாட்டு ஜனாதிபதி சிரில் ரமபோசா அறிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்காவில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நான்கு நாட்கள் தொடர்ந்து மழை பெய்ததால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கடலோர மாகாணமான குவாசுலு-நடால் மழை வெள்ளத்தால் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்திற்கு இது வரை 400 பேர் இறந்துள்ளனர். 40 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வீடுகளை இழந்துள்ளனர். பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. மின்சாரம் மற்றும் குடிநீர் விநியோகம் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில், வெள்ளப் பாதிப்பை தேசிய பேரழிவு நிலையாக அந்நாட்டு ஜனாதிபதி சிரில் ரமபோசா அறிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதையும் அவர்களின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதையும் உறுதிசெய்து உடனடி மனிதாபிமான நிவாரணத்தில் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ஒமைக்ரோனால் குழந்தைகளுக்கு சுவாச பாதை தொற்று பாதிப்பு!

## குணப்படுத்த முடியும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை

வாஷிங்டன்,ஏப்.20

**ஒமைக்ரோன் வைரசால் குழந்தைகளுக்கு சுவாச பாதை தொற்று பாதிப்பு ஏற்படுவதாக ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது.**

**ஒமைக்ரோன் வைரசால் பல நாடுகளில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்தது. மேலும் ஒமைக்ரோன் வைரசில் இரண்டு துணை வகைகளும் பரவியது.**




கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தென் ஆபிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய உருமாறிய கொரோனா ஒமைக்ரோன் வைரஸ், அதற்கு முன்னர் உருமாறிய வைரஸ்களை விட வேகமாக பரவும் தன்மை கொண்டது. இந்நிலையில், கொரோனா வைரசின் ஏனைய மாறுபாடுகளை விட ஒமைக்ரோன் வைரசால் குழந்தைகளுக்கு மேல் சுவாசபாதை தொற்று ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக்கழகம், நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்டோனி புருக் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கொரோனா பாதிப்பால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 19 வயதுக்குட்பட்ட 18 ஆயிரத்து 849 குழந்தைகள் தொடர்பான தரவுகளை ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. அதில், ஒமைக்ரோன் வைரஸ் பரவுவதற்கு முன்பு மேல் சுவாச பாதை தொற்று 4 வயது முதல் உள்ள குழந்தைகளுக்கு ஏற்பட்டது. ஒமைக் ரோன் பரவலுக்கு பின் மேல் சுவாச பாதை தொற்று 2 வயது குழந்தைகளுக்கும் ஏற்படுகிறது.

ஒட்டு மொத்தமாக கொரோனா மற்றும் மேல் சுவாசப்பாதை தொற்று ஆகியவற்றால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் குழந்தைகளில் 21.1 சதவீதம் பேர் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகி இருந்தனர். அவர்களுக்கு குழாய் மூலம் சுவாசிக்கும் கருவி பொருத்துவது போன்ற சிகிச்சைகள் தேவைப்பட்டது.

கடுமையான மேல் சுவாச பாதை அடைப்பால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு மாரடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் பிற கடுமையான நோய் பாதிப்புகளும் ஏற்படலாம்.

கொரோனா பாதிக்கப்பட்ட குழந்தைகளில் மேல் சுவாச பாதை தொற்று விகிதம் அதிகமாக இல்லை என்றாலும், இந்த புதிய ஆய்வு முடிவால் மேல் சுவாசப்பாதை அடைப்புக்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக காட்டுகிறது. சிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியும் என்றும் ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

# அதிக நாட்கள் உயிர் வாழ்ந்து கின்னஸில் இடம்பிடித்த நாய்





புளோரிடா, ஏப். 20

அமெரிக்காவில் நாய் ஒன்று அதிக நாட்கள் உயிர் வாழ்ந்து வரும் நாயாக கின்னஸ் உலக சாதனைப்புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் நாய் ஒன்று 21 வயது 66 நாட்களை கடந்து அதிக நாட்கள் உயிர் வாழ்ந்த நாயாக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. இந்த நாய் "உலகின் மிகப்பழமை யான நாய்" என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த நாய் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள க்ரீனாக்ரேஸின் கிசெலா ஷோர் என்பவருக்கு சொந்தமானது. சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராமில் கின்னஸ் அமைப்பு பதிவிட்டதை பகிர்ந்த அவர், தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

# சுவீடனில் குர்-ஆன் எரிப்பு சவுதி கண்டன அறிக்கை



ஸ்டாக்ஹோம், ஏப்.20

சுவீடனில் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்-ஆன் எரிக்கப்பட்ட சம்பவங்களுக்கு சவுதி அரேபியா கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக, சவுதி அரேபிய வெளியுறவு அமைச் சகம் அறிக்கையொன்றை வெளியிட்டது.

அதில், 'முஸ்லிம்களையும் குர்-ஆனையும் இழிவுபடுத்தும் வகையில் வேண்டுமென்றே செய்யப்பட்ட இச்செயல்களுக்கு சவுதி அரேபியாவின் கண்டனத்தை வெளியுறவுத் துறை பதிவு செய்கிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ' சவுதி அரேபியா உரையாடல், சகிப்புத்தன்மை, சகவாழ்வு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. அத்துடன், வெறுப்பு, தீவிரவாதம் மற்றும் அனைத்து மதங்கள் மற்றும் புனிதத் தலங்களை அவமதிப்பதையும் எதிர்க்கிறது' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹார்ட் லைன் இயக்கத்தின் தலைவரும் டேனிஷ்- சுவீடன் அரசியல்வாதியும் வழக்கறிஞருமான ரஸ்மஸ் பலுடன், 'இஸ்லாத்தின் புனித நூலைத் தாம் எரித்ததாகவும் அதை மீண்டும் செய்யப்போவதாகவும்' கூறினார்.

இதனை தொடர்ந்து, அங்கு போராட்டம் வெடித்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதி உக்ரைன் செல்லும் திட்டம் எதுவும் இல்லை!

## வெள்ளை மாளிகை தகவல்

வாஷிங்டன், ஏப்.20

உக்ரைனுக்கு செல்வதற்கான எந்தத்திட்டமும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு இல்லை என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

வெள்ளை மாளிகை செய்தியாளர் செயலாளர் ஜென் சாகி செய்தியாளர்களிடம் இவ்வாறு கூறினோர்.

இருப்பினும், பைடனின் இந்த பயணம் மிகவும் சிக்கலான பாதுகாப்பு சவாலை முன்வைக்கும் என்று கூறிய அவர், பைடன் நிர்வாகம் அதற்கு பதிலாக ஒரு உயர் பதவியில் இருக்கும் அதிகாரியை அனுப்ப விரும்புவதாகவும் கூறினார்.

"யாராவது சென்றால் பாதுகாப்பு காரணங்களுக்காக யாரை, எப்போது என்று அரசாங்கத்திடம் இருந்து நாங்கள் தெரியப்படுத்த மாட்டோம்" என்றும் அவர் தெரிவித்தார். "இரண்டு ஜனாதிபதிகளுக்கு இடையிலான தனிப்பட்ட சந்திப்பு, உக்ரைனுக்கான புதிய பொருட்கள், அமெரிக்க ஆயுதங்கள் மற்றும் இந்த மோதலின் சாத்தியமான அரசியல் தீர்வு பற்றிய விவாதங்களுக்கு வழி வகுக்கும்," என்றும் அவர் கூறியமை குறிப்பிடத்தக்கது.



ஈழநாடு



# பட்லர் அதிரடி சதம் ராஜஸ்தான் வெற்றி!



மும்பை, ஏப். 20

218 ஓட்டங்கள் என்ற மிகப்பெரும் இலக்கைத் துரத்திய கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி மாற்றத்துடன் களமிறங்கி யிருந்தது. வெங்கடேஷ் ஐயருக்கு பதிலாக சுனில் நரேன், அரோன் பின்ஞ்சுடன் தொடக்க வீரராக களம்புகுந்தார். ஆனால், இந்த மாற்றம் கைகொடுக்கவில்லை.

முதல் பந்திலேயே நரேனை ஹெட்மேயர் ரன் அவுட் மூல மாக வெளியேற்ற கொல்கத்தா அணி அதிர்ச்சியை சந்தித்தது. எனினும், அடுத்து வந்த அணித் தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர், அரோன் பின்ஞ்சுடன் இணைந்து அதிரடியாக விளையாடினார். இருவரும் அவ்வப்போது பந்தை எல்லைக்கோட்டுக்கு அனுப்பினர்.

இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை 7 ஓவர்களில் 70 ஓட்டங்களைத் தாண்டி சென்றது. விரைவாக 100 ஓட்டங்களை யும் சேர்த்தனர். 9ஆவது ஓவரின் கடைசி பந்தில்தான் இந்தக் கூட்டணி பிரிந்தது. 58 ஓட்டங்கள் எடுத்த அரோன் பின்ஞ், பிரசித் கிருஷ்ணா பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன்பின்னர் வந்தவர்களில் நிதிஷ் ராணா மட்டுமே 18 ஓட்டங்கள் எடுத்தார். மற்றவர்கள் அடுத்தடுத்து ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். குறிப்பாக சாஹல் தனது ஓவ ரில் ஒரு ஹட்ரிக் விக்கெட்டுடன் சேர்த்து அந்த ஒரு ஓவரில் 4 விக்கெட்களை எடுத்து போட்டி யின் போக்கையே மாற்றினார்.

இந்தப் போட்டியில் சஹால் மட்டும் மொத்தம் 5 விக்கெட் கைப்பற்றினார். 85 ஓட்டங்கள் எடுத்த ஷ்ரேயாஸையும் சஹால் ஆட்டமிழக்கச் செய்து அதிர்ச்சி கொடுத் தார்.

இறுதிக்கட்டத்தில் உமேஷ் யாதவ் 6 பந்துகளில் 20 ஓட்டங் கள் எடுத்து ராஜஸ்தான் பந்துவீச்சாளர்களுக்கு அச்சத்தை ஏற் படுத்தி னார். இதனால் இறுதி ஓவரில் 6 பந்துகளுக்கு 11 ஓட் டங்கள் தேவை என்ற நிலை ஏற்பட்டது. கடைசி ஓவரை வீசிய மக்காய் திறம்பட வீசிய இரண்டு விக்கெட்களை வீழ்த்தி அணியை வெற்றிபெற வைத்தார். இதனால் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி கொல்கத்தா அணியை வீழ்த்தியது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணியின் தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர் பந்துவீச்சைத் தெரிவு செய்தார். இதன்படி, ராஜஸ்தான் அணிக்கு தேவ்தத் படிக்கல், ஜோஸ் பட்லர் இணை தொடக்கம் கொடுத்தது. ராஜஸ்தான் அணிக்கு சிறப்பான தொடக்கம் கொடுத்த இந்த இணையை பிரிக்க முடியாமல் கொல்கத்தா பந்துவீச்சாளர்கள் தடுமாறினர்.

ஒருவழியாக 9ஆவது ஓவரில் 18 ஓட்டங்கள் எடுத்து பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த தேவ்தத் படிக்கல்லை சுனில் நரேன் வெளியேற்றினார். அடுத் தாகக் களத்துக்கு வந்த சஞ்சு சாம்சன் பட்லருடன் கைகோத்தார். இருவரும் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த 15-வது ஓவரில் ஒரு விக்கெட்டை இழந்த ராஜஸ்தான் அணி 163 ஓட்டங்களை சேர்த்தது. ஒருபுறம் பட்லர் ஆடி 55 பந்துகளில் 90 ஓட் டங்களை குவித்து அதிரடி காட்டினார். அவர் கொல்கத்தா பந்துவீச்சாளர்களுக்கு சிம்ம சொப் பனமாக திகழ்ந்தார்.

18 பந்துகளில் 38 ஓட்டங்களை எடுத்திருந்த சஞ்சு சாம்சன் ரஸல் பந்தில் விக்கெட்டை இழந்து வெளியேறினார். இதைய டுத்து பட் கம்மின்ஸ் வீசிய பந்தில் பிடியெடுப்பாக அதுவரை அதிரடி யாக ஆடிக்கொண்டிருந்த பட்லர் 61 பந்துகளில் 103 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார். அடுத்து வந்த ரியான் பராக் 5 ஓட்டங்களில் நடை யைக் கட்டினார். கருண் நாயரும் பெரிய அளவில் ஓட்டங்கள் எடுக்கவில்லை. இதனால் நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 5 விக் கெட் இழப்புக்கு 217 ஓட்டங்களைக் குவித்தது.

ஹெட்மேயர் 26 ஓட்டங்களுடனும், ரவி சந்திரன் அஸ்வின் 2 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

கொல்கத்தா அணி தரப்பில், சுனில் நரேன் 2 விக்கெட்களையும், ரஸல், பட் கம்மின்ஸ், ஷிவம் மவி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# தேசிய மெய்வன்மை போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன!

கொழும்பு, ஏப். 20

இலங்கை மெய்வல்லுநர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள கனிஷ்ட தேசிய மெய்வன்மை போட்டி கொழும்பு சுகததாச விளையாட் டரங்கில் எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதி யிலிருந்து 12ஆம் திகதிவரை நடைபெறவுள் ளது.

கொரோனா தொற்று நோய்த் தாக்கம் காரணமாக கடந்த 2 வருடங்களாக நடத்தப் படாமல் இருந்த கனிஷ்ட தேசிய மெய்வல் லுநர் போட்டிகள் இந்த வருடம் 4 வயது பிரிவுகளில் நடத்தப்படும்.

16 வயதுக்குட்பட்ட, 18 வயதுக்குட் பட்ட, 20 வயதுக்குட்பட்ட மற்றும் 23 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாக 20 வயதுக்கு உட்பட்டவர்கள் போட்டிகளில் பங்குபற்ற முடியாமல் போனதால் அவர களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் 23 வயதுக்குட்பட்ட பிரிவுக்கான போட்டி களை நடத்த இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தீர்மானித்துள்ளது.

கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டி களில் பங்குபற்ற விரும்பும் வீர, வீராங்கனை கள் எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் தங்களது சங்கங்கள் அல்லது பாடசாலைகள் ஊடாக விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை (Palitha Jayathileke, The Competition Committee, Sri Lanka Athletics, No 33, Independence Avenue, Colombo 07) என்ற முகவரிக்கு அனுப்பி வைக் குமாறு மெய்வல்லுநர் சங்கத்தின் உதவித் தலைவர் ஜீ. எல். எஸ். பெரேரா தெரிவித்தார்.

கடந்த 2 வருடங்களாக கனிஷ்ட பிரிவு போட்டிகள் நடத்தப்படாத நிலையில் இந்த வருடப் போட்டி கனிஷ்ட மெய்வல்லுநர் களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என அவர் குறிப்பிட்டார்.

# போட்டி முடிவை மாற்ற முடிந்ததில் மகிழ்ச்சி!

## ஹட்ரிக் வீழ்த்திய சாஹல்



மும்பை, ஏப். 20

"போட்டியின் முடிவை மாற்ற நான் விக்கெட் வீழ்த்த வேண் டியிருந்தது" எனத் தெரி வித்துள்ளார் நேற்றுமுன் தினம் ஐ. பி. எல். லீக் போட்டியில் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய ராஜஸ்தான் வீரர் சாஹல்.

கொல்கத்தா நைற் ரைடர்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இதில், ராஜஸ்தானின் வெற்றிக்கு சாஹலின் பந்துவீச்சு பிரதான காரணமாக அமைந் தது.

கொல்கத்தா அணி மிகச் சுலபமாக இந்த போட்டியை வென்று விடும் என்ற சூழலே இருந்தது. அப்போது 17வது ஓவரை வீசிய சாஹல், ஹட் ரிக்குடன் 4 விக்கெட்களைக் கைப்பற்றியிருந்தார்.

போட்டியின் நாயகனாக தெரிவு செய்யப்பட்ட அவர், "போட்டியின் முடிவை மாற்ற நான் விக்கெட் வீழ்த்த வேண் டியிருந்தது. எனது பந்து வீச்சில் நிறைய பயிற்சி மேற் கொண்டேன். அது தொடர் பாக பயிற்றுநர் மற்றும் தலைவர் வசம் பேசியிருந்தேன். நான் கூக்லி வீசலாம் என யோசித்தேன். ஆனால், அதை செய்யவில்லை. ஹட்ரிக் விக்கெட்களுடன் வீசியதில் எனக்கு மகிழ்ச்சி" என்றார். (ஐ)

# எவ். ஏ. கிண்ண உதைபந்தாட்டம் இறுதியாட்டத்தில் செல்சீ அணி!




லண்டன், ஏப். 20

இங்கிலாந்தில் நடக்கும் எவ். ஏ. கிண்ண உதைபந் தாட்ட போட்டியின் இரண் டாவது அரையிறுதியில் செல்சீ அணி 2-0 என்ற கோல் கணக் கில் கிறிஸ்டல் பலஸ் அணியை வெற்றி கொண்டது.

இதையடுத்து இறுதி ஆட் டத்தில் லிவர்பூல் அணியின் சவாலை வரும் மே 14-ஆம் திகதி சந்திக்க இருக்கிறது செல்சீ. இந்தப் போட்டி யில் செல்சீ 8 முறையும், லிவர்பூல் 7 முறையும் சம்பியனாக்கியுள்ளன. கடந்த பெப்ரவரியில் லீக் கிண்ணப் போட்டியில் லிவர்பூல் அணி செல் சீயை வீழ்த்தி சம்பிய னாகியது. இதற்கு செல்சி இதில் பதிலடி தருமா என்ற எதிர்பார்ப்பு உள் ளது.

லண்டனில் உள்ள வெம்ப்ளி மைதானத்தில், இலங்கை நேரப்படி ஞாயிற்றுக்கிழமை நள்ளி ரவு நடைபெற்ற அரையி றுதி ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணி களுக்குமே கோல் வாய்ப்பு கிடைக்கவில்லை. 2ஆவது பாதியில் 65-ஆவது நிமிடத்தில் ரூபன் லோப்டஸ் சீக் அடித்த கோலால் செல்சீ முன்லை பெற்றது. தொடர்ந்து ஆட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்த செல்சீ அணிக்கு, 76ஆவது நிமிடத்தில் மேசன் கோலடிக்க, இறுயில் அந்த அணியே வெற்றி பெற்றது.

# றொனால்டோவின் குழந்தை மரணம்!

லிஸ்பன், ஏப். 20

பிரபல உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ வுக்கு பிறந்த இரட்டை பிள்ளைகளில் ஆண் குழந்தை உயிரிழந்து விட்டதாக சமூக ஊடகத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

றொனால்டோ மற்றும் அவரின் இணை யான ஜோர்ஜினா ரோட்ரிகெஸூக்கு திங்கள்கிழமை ஆண் குழந்தையும், பெண் குழந்தைகள் பிறந்தன. ஆனால், ஆண் குழந்தை உயிரிழந்து விட்டது. இந்தத் தகவலை சமூக ஊடகப் பக்கத்தில் பதிவிட் டுள்ள அவர், "இந்த இழப்பால் நாங்கள் அனைவரும் மனமுடைந் துள்ளோம். இந்தக் கடினமான நேரத்தில் எங்கள் தனியுரிமைக்கு இடமளிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், குழந்தையின் உயிரைக் காக்கப் போராடிய மருத்து வர்கள் மற்றும் தாதியர் களுக்கு நன்றியையும் தெரிவித்துள்ளார் றொனால்டோ.

# புதிய அமைச்சர்கள் 17 பேரில் 10 பேர் முன்னாள் அமைச்சர்களின் உறவுகள்

*கொழும்பு, ஏப். 20*

*புதிய அமைச்சரவையில் இடம் பிடித்துள்ள 17 பேரில், 10 பேர் முன்னாள் அமைச்சர்களின் இரத்த உறவுகள் என திவயின நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.*

*முன்னாள் - இந்நாள் அரசியல்வாதிகளின் புதல்வர்களும், சகோதரர்களுமே இவ்வாறு அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*அமைச்சர் தினேஷ் குணவர்தன (பிலிப் குணவர்தனவின் புதல்வர்),*

*அமைச்சர் ரமேஷ் பத்திரன (ரிச்சர்ட் பத்திரனவின் புதல்வர்),*

*அமைச்சர் பிரசன்ன ரணதுங்க (ரெஜி ரணதுங்கவின் புதல்வர்),*

*அமைச்சர் திலும் அமுனுகம (சரத் அமுனுகமவின் உறவினர்),*

*அமைச்சர் கனக ஹேரத் (மஹிபால ஹேரத்தின் புதல்வர்),*

*ஷெஹான் சேமசிங்க (எச். பி.சேமசிங்கவின் புதல்வர்),*

*காஞ்சன விஜேசேகர (மஹிந்த விஜேசேகரவின் புதல்வர்)*

*விதுர விக்ரமநாயக்க ( முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்கவின் புதல்வர்),*

*பிரமித்த பண்டார தென்னக்கோன் (ஜனக பண்டார தென்னக்கோனின் புதல்வர்),*

*தெனுக விதானகமகே (அனுர விதானகமகவின் சகோதரர்)*

*ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர், டி.ஏ.ராஜபக்ஷவின் புதல்வர்களாவர்.*

*அதேவேளை, தற்போது பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களுள் பெரும்பாலானோர் அரசியல்வாதிகளின் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)*

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 07 - 02 - 1951

**மறைவு** 17 - 04 - 2022

### சோமசுந்தரம் ஞானசுந்தரம்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Liestal ஐ வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஞானசுந்தரம் அவர்கள் 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சோமசுந்தரம்(ஆசிரியர்), ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அரிச்சந்திரா பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயலக்சுமி அவர்களின் அன்புக் கணவரும், சண்முகசுந்தரம், சுபதாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுந்தரம் அவர்களின் அன்பு மாமாவும்,அபிசன், சுருதிகா, ஸ்ரீராம், அபிநயா, சன்யா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும்,ஜெயந்திராதேவி (இலங்கை), வசந்தமாலா(சுவிஸ்), பவானி(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,ஜெயக்குமார்(சுவிஸ்), இளங்கோ(கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஜெனனி, சங்கீதா, இளவரசன் ஆகியோரின் அன்பு மாமாவும்,ஜெகதாலஷ்மி, ஜெயராசா, ஜெயஈஸ்வரன், ஜெயபுத்திரன், ஜெயசாந்தன், ஜெயந்தி ஆகியோரின் அத்தானும்,சிவானந்தன், வசந்தராணி, நிர்மலா, நிம்மியா, விஜயமாலா, சாந்தசீலன் ஆகியோரின் அண்ணாவும்,பிரவீனா, பிரணிதா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும்,சாமினி, சனோ, கரிஸ், மதுசா, மிதுசா, விதுசன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

*பார்வைக்கு*
Monday, 18 Apr 2022 4:30 PM - 7:30 PM
Tuesday, 19 Apr 2022 1:00 PM - 7:00 PM
Wednesday, 20 Apr 2022 1:00 PM - 7:00 PM
Friedhof Liestal Nähe Rosen, Nelkenstrasse, 4410 Liestal, Switzerland

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**சிவா - மருமகன்** Mobile : +41796070772
**சேகர் - சகோதரன்** Mobile : +41795587638
**ஜெயக்குமார் - மைத்துனர்** Mobile : +41791950054
**வசந்தமாலா - சகோதரி** Mobile : +41788794512
**ஜெயந்திராதேவி - சகோதரி** Mobile : +94765574705
**பவானி - சகோதரி** Mobile : +94766685098

*தகவல் :*
**குடும்பத்தினர்.**

# வரிசைகள் இல்லாத நிலை மிகவிரைவில் உருவாகும்

## உறுதி கூறுகிறார் பிரதமர் மஹிந்த



**கொழும்பு, ஏப். 20**

**24 மணி நேரத்தில் தீர்வு கிடைக்காவிட்டாலும், மிக விரைவில் வரிசைகள் இல்லாத நிலைமை உருவாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவித்தார்.**

*பாராளுமன்றத்தை ஆரம்பித்து வைத்து விசேட உரையொன்றை ஆற்றிய மஹிந்த ராஜபக்ஷ, நெருக்கடிகளை சமாளிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.*

*அரசியல் ரீதியில் இது ஆழம் குறைந்த நீரில் மீன்பிடிப்பதற்கான சந்தர்ப்பம் அல்ல. அரசாங்கமாகிய நாம் எமது பொறுப்புகளில் இருந்து தப்பிக்க முடியாது. பொருளாதார நெருக்கடியை சமாளிக்க நட்பு நாடுகளும் உதவி செய்து வருகின்றன.*

*குறுகிய காலத்தில் நிலைமையைச் சமாளித்து, நீண்ட காலத்தில் இத்தகைய நெருக்கடியைத் தடுக்க அடித்தளம் அமைக்கவேண்டும். இதற்கு எதிர்ப்புக்கு அப்பாற்பட்ட தலையீடு தேவைப்படுகிறது. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும்.*

*காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தோம்.அவர்களது கருத்துக்களையும் கேட்க தயாராக உள்ளோம். எங்கள் முயற்சிக்கு அனைவரும் ஆதரவு அளிப்பார்கள் மக்கள் ஆசிர்வதிப்பார்கள் என நம்புகிறோம்-என்றார். (அ)*

## பாடசாலை வான் கட்டணமும் உயர்வு

*கொழும்பு, ஏப். 20*

*எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலை வான் கட்டணத்தை 1000 ரூபாயாக அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பாடசாலை வான் நடத்துநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*டீசல் இல்லாததால் சேவையை தொடர்வதில் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பாக எரிபொருள் நிரப்ப நீண்ட நேரம் வரிசையில் நிற்கவேண்டியுள்ளது என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.*

*கடந்தமுறை எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டபோது பாடசாலை வான் கட்டணத்தை அதிகரிக்காமல் இருக்க தீர்மானம் எட்டப்பட்டது.*

*ஆனால் தற்போது எதிர்நோக்கும் பல பிரச்னைகளை கருத்திற்கொண்டு கட்டணங்களை அதிகரிப்பதைத் தவிர வேறு வழி தமக்கில்லை என பாடசாலை வான் நடத்துநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)*

## ஓட்டோ கட்டணம் அதிகரிப்பு

*கொழும்பு, ஏப். 20*

*ஓட்டோ கட்டணம் முதல் கிலோமீற்றருக்கு ரூ.80 ரூபாவாகவும் இரண்டாவது கிலோமீற்றருக்கான கட்டணத்தை 70 ரூபாவாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)*

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 11 - 10 - 1931

**மறைவு** 18 - 04 - 2022

### திருமதி செல்லையா இராசம்மா

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராசம்மா அவர்கள் 18.04.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பையா இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையா(முன்னாள் கனிஷ்ட அதிபர் அருணோதயாக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும்,சிறிரஞ்சனி(இலங்கை), ஜெகநாயகி(டென்மார்க்), செல்வவிநாயகன்(நோர்வே), சிறி காந்தன்(இலங்கை), கருணாகரன்(பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான பழனிவேல், வெற்றி வேல், அருணாசலம், வள்ளியம்மை, தெய்வநாயகி மற்றும் பாலசுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,ஸ்கந்தேஸ்வரன்(இலங்கை), பத்மநாதன் (டென்மார்க்), ஜீவராணி(நோர்வே), திராவிடமலர்(இலங்கை), மீரா (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சேதுப்பிள்ளை, செல்லம்மா, கனகம்மா, சிவலட்சுமிதேவி, சிவசுப்பிரமணியம், அரியராசா மற்றும் சிவபாக்கியம், சத்தியதேவி, செல்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும், விசித்தா- சிவகாந்தன், சுதாகரன்- ஜலஜாயினி, கஜானன்- அம்ஷலா, ரகுவரன்- கீற்ர, சிறிலக்சனா- யதுரன், பவன், இலக்சன், பங்கஜன், பிரதீஷ், திவாம்சன் ஆகியோரின் அன்புப் பேத்தியும்,லதுர்சன், நயனிகா, தேஜஷ்வி, ரேஷ்மன், மாத்தா எல்வினி, அகத்தா எல்வினி, மாயா லக்ஸ்மி, லியா லக்ஸ்மி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியை 20-04-2022 புதன்கிழமை அன்று மு.ப 11:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**சிறிரஞ்சனி - மகள்** Mobile : +94212241031
**ஜெகநாயகி - மகள்** Mobile : +4586248154
**சிறிகாந்தன் - மகன்** Mobile : +94741771966
**கருணாகரன் - மகன்** Mobile : +447733263356

*தகவல் :*
**கருணாகரன் (மகன்)**

## ரம்புக்கனையில்...

நாட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள்கள் விலையுயர்த்தப்பட்டன. இந்த அதிகரிப்பை கண்டித்து கேகாலையின் ரம்புக்கனையில் நேற்று அதிகாலை 1.30 மணி முதல் பொதுமக்கள் ரயிலை மறித்துப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதேபோன்று, ரம்புக்கனை - கேகாலை பிரதான வீதி, குருநாகல் - மாவனெல்லை பிரதான வீதியையும் வழிறித்தவர்கள் வீதிகளில் ரயர்களை போட்டு எரித்து தடைகளை ஏற்படுத்தினர்.

சுமார் 15 மணி நேரத்துக்கு மேலாகத் தொடர்ந்த ரயில் மறிப்பு போராட்டத்தால் மலைநாட்டுக்கான ரயில் சேவைகள் முற்றாக தடைப்பட்டன. இதனால், போராட்டத்தை அடக்க முனைந்த பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர். இதைத் தொடர்ந்து எழுந்த களேபரத்தில் பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்தனர். இதில் ஒருவர் உயிரிழந்தார்.

இதையடுத்து பொலிஸாருக்கு எதிராகப் போராட்டக்காரர்கள் மோதலில் ஈடுபட்டனர். இந்த மோதலில் 8 பொலிஸார் உட்பட 24 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது.

இதனிடையே கேகாலை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் காயமடைந்த போராட்டக்காரர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

ரம்புக்கனை போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக உடனடியாக இராணுவத்தினர் அந்த இடத்துக்கு அழைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து நேற்று மாலை முதல் ரம்புக்கனை பொலிஸ் பிரிவு முழுவதும் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ரம்புக்கனை போராட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்துக்கு ஐ. நா. பிரதிநிதி, அமெரிக்கா, கனடா, சர்வதேச மன்னிப்பு சபை மற்றும் நாமல் ராஜபக்ஷ எம். பி., கிரிக்கெட் பிரபலங்களான மஹேல ஜெயவர்த்தன, சனத் ஜெயசூரிய ஆகியோர் கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

ஐ. நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர், "மக்களைப் பாதுகாப்பதற்கும், அடிப்படை சுதந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கும் தேவையான குறைந்தபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி போராட்டங்களைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாதது", என்று கூறியுள்ளார்.

ரம்புக்கனையில் இருந்து வெளியாகும் செய்திகளால் தான் மிகவும் வருத்தமடைவதாகக் குறிப்பிட்டுள்ள அமெரிக்க தூதுவர் இந்தச் சம்பவம் குறித்து வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் போராட்டத்திற்கான மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## நிதியமைச்சர்...

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்ரலினா ஜோர்ஜியாவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சின்போது சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவ வேண்டும் - துரிதமாக நிதியுதவி வழங்க வேண்டும் என்று இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த இரு சந்திப்புகளும் அமெரிக்காவின் வாஷிங்டனிலுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையகத்தில் நடைபெற்றன.

நாட்டின் நிதி நெருக்கடியை தீர்க்கும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதற்காக நிதியமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழு வாஷிங்டன் சென்றது. இந்தக் குழு நேற்று சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளரை சந்தித்து பேச்சு நடத்தியது.

இதில், ஒரு நிலையான தீர்வை அடைவதற்கு இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதை சர்வதேச நாணய நிதியம் சாதகமாக பரிசீலிப்பதாகவும், நிதி உதவிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன என்று முதல் வெளியான தகவல்கள் தெரிவித்தன.

இதேசமயம், நிலைமையை சமாளிக்க நிதியமைச்சர் எடுத்த நடவடிக்கைகளை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியது. இதன்போது, நிதியமைச்சர் நிதி உதவிக் கோரிக்கைகளை முன்வைத்தார் என்று நிதியமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, சர்வதேச நாணய நிதிய தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்தியாவின் நிதியமைமைச்சர் நிர்மலா சீதாராமனை நிதியமைச்சர் அலி சப்ரி பிரத்தியேகமாக சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது இலங்கைக்கு தொடர்ந்தும் இந்தியா ஆதரவளிக்கும் என்று நிர்மலா சீதாராமன் உறுதியளித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேசுவதற்காக சென்ற இலங்கையின் குழுவில் நிதியமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன ஆகியோர் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாடு முழுவதும்...

பல்வேறு இடங்களிலும் வெடித்த மக்கள் போராட்டங்கள் சில இடங்களில் வன்முறைகளாகவும் மாற்றம் பெற்றன. போராட்டங்களை அடக்க பொலிஸார், விசேட அதிரடிப் படையினருடன் இராணுவத்தினரும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் அவிசாவளையில் பிரதான பிரதான வீதிகளை அதிகாலை மறித்த மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகே ஓட்டோ சாரதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதேபோன்று துன்முல்லை பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் போராட்டத்தாலும் இதனால், இராஜகிரிய, பத்தரமுல்லை, பெலவத்தை, கோட்டை பகுதிகளில் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதேபோன்று, வடக்கில் வவுனியாவிலும், கிழக்கில் திருகோணமலையிலும் காலியின் தேவேந்திரமுனை, பதுளையின் தியத்தலாவை, பண்டாரவளை, மாத்தறை, மாத்தளை, ஹற்றன், திகனை, மத்துகம, கம்பளை, ஹிங்குராங்கொடை, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

வாகனங்களை குறுக்கே நிறுத்தியும் ரயர்களை வீதியில் போட்டு எரித்தும் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இந்தப் போராட்டங்களை அடக்குவதற்கு பொலிஸாரும் விசேட அதிரடிப் படைப் பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர்.

இதேசமயம், நேற்று 10ஆவது நாளாகவும் காலிமுகத் திடலிலும் அரசுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்திலும் மக்கள் அதிகம் கூடாதவகையில் தடைகளை ஏற்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட வீதித் தடைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றிணைந்து அங்கிருந்து அகற்றினர்.

இந்நிலையில், ரம்புக்கனை போராட்டத்தில் கொல்லப்பட்டவருக்கு நேற்றிரவு காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர். (ஐ)

## பெற்றோல்...

இதற்கமைய, ஒக்ரேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 338 ரூபாவாகும்.

அத்துடன், ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 373 ரூபாவாகும்.

மேலும், லங்கா ஒட்டோ டீசலின் புதிய விலை 289 ரூபாவாகும்.

லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 329 ரூபாவாகும். (அ)

# நிறைவேற்றதிகார முறை ஒழிக்கப்படவேண்டும்!

## சபையில் சஜித் வலியுறுத்து



கொழும்பு, ஏப். 20

20 ஐ நீக்கி 19 ஐ அறிமுகப்படுத்துவதில் திருப்தி இல்லை என்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் பிரதமரின் விசேட அறிக்கையின் பின்னர் எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது: -

அரசாங்கம் இப்போது என்ன சொல்கிறது என்பதை இரண்டரை வருடங்களுக்கு முன்பே புரிந்து கொண்டோம். அரசு வேண்டுமென்றே இந்தத் தவறைச் செய்துள்ளது. இது சிறிய தவறு அல்ல. 220 மில்லியன் மக்களை மயானத்திற்கு அனுப்பியது குற்றச் செயல் என்றே கூற வேண்டும்.

தற்போது சர்வதேச அமைப்புகளிடம் இருந்து நல்ல வரவேற்பை பெற்றுள்ளோம் என பிரதமர் கூறினார். இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏன் அந்த பரிவர்த்தனை செய்யப்படவில்லை? அரசாங்கத்தின் தவறுகளால் இன்று வரிசைகள் நிற்கின்றன.

இன்று எந்த அதிகாரமும் இல்லாமல் அரசாங்கம் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டிருக்கிறோம். 20ஐ ஒழித்துவிட்டு 19ஐ அறிமுகப்படுத்துவதில் எங்களுக்கு திருப்தி இல்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும். உண்மையை நாட்டுக்கு சொல்லுங்கள். ஏமாற மாட்டோம். மக்கள் போராட்டத்தின் குரல் நாடாளுமன்றத்தில் எதிரொலிக்க வேண்டும். ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும். ஒரு முற்போக்குக் குழு இன்று எதிர்க்கட்சியின் பக்கம் அமர்ந்தது. அவர்களுடன் முற்போக்கான கலந்துரையாடல்களை நடத்தி போராட்டக்காரர்களுக்கு தீர்வுகளை வழங்குவோம்-என்றார். (அ)

# திருகோணமலையிலும் போராட்டங்கள் வெடிப்பு



திருகோணமலை, ஏப். 20

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் இலங் கையின் பல பாகங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று திருகோணமலை நகரிலும் இளைஞர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை நகரினுள் நுழைவதற்கு பயன்படுத்தப்படும் இரு பிரதான வீதிகளையும் வழிமறித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை கண்டி பிரதான வீதியில் 22ஆம் படைப்பிரிவு சந்தியை வழிமறித்த இளைஞர்கள் ஒன்றிணைந்து பொருட்கள் விலையுயர்வுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இதன்போது அவர்கள் இந்த அரசாங்கம் கலைக்கப்பட வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்தனர். திருகோணமலை - புல்மோட்டை பிரதான வீதியில் ஸ்ரீமாபுரம் சந்தியில் வீதியை வழிமறித்து ரயர்களை எரித்து இளைஞர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் பல மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

## மதிய...

சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளதன் விளைவாக போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து வருவதால் மதிய உணவுப் பொதிகளின் விலைகள் அதிகரிக்கப்படவேண்டும் என அவர் கூறினார்.

மதிய உணவுப் பொட்டலங்கள் மற்றும் இதர உணவுப் பொருட்களை கொண்டு செல்வதற்கும் விநியோகிப்பதற்கும் நாங்கள் பெரும்பாலும் ஓட்டோக்கள் மற்றும் மினி ட்ரக் வண்டிகளையே பயன்படுத்துகின்றோம். அவை நிச்சயமாக போக்குவரத்துக் கட்டணத்தை அதிகரிப்பதோடு அது நேரடியாக எம்மைப் பாதிக்கும் எனவும் அவர் கூறினார்.

எனவே, மதிய உணவுப் பொட்டலங்களின் விலை எவ்வளவு என்று எங்களால் கூற முடியாது, ஆனால் ஒரு முன்முயற்சியாக, விலையை 20 வீதம் உயர்த்த முடிவு செய்துள்ளோம் என்றும் சம்பத் மேலும் குறிப்பிட்டார். (அ)

## பாணின்...

வித்தது.

அத்துடன், ஏனைய பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகள் 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது. (அ)

## கோதுமை...

அறிவித்துள்ளது.

அதற்கமைய, உடன் அமுலுக்கு வரும் வகையில் குறித்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக பிரீமா நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## பஸ் கட்டணமும்...

திலும் அமுனு கம வெளியிட்டார்.

அதன் அடிப்படையில்,

பஸ் ஒன்றின் அதி குறைந்த பயணக் கட்டணமாக 27 ரூபா அறவிடப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

## பாடசாலைகள்...

தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் சம்மேளனம் அழைப்பு விடுத்திருந்தது.

இதைத் தொடர்ந்து பாடசாலைகள் நடைபெறுமா இல்லையா என்பதில் குழப்ப நிலை ஏற்பட்டது. இந்த நிலையில், பாடசாலைகள் வழமை போன்று இயங்கும் என்றும் ஆசிரியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து செல்வர் என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அரசு மக்களுக்கு ஒருபோதும் கஷ்டங்களை ஏற்படுத்தாது

## சபையில் கூறினார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஏப். 20

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் இந்த சபையின் உறுப்பினர்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். நமது நாட்டின் வரலாற்றில் நீண்ட காலமாக எதிர்கொண்ட பொருளாதார சவால் தற்போது மிகவும் கடினமான கட்டத்தை எட்டியுள்ளது என பிரதமர் நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

ஒரு அரசு தன் மக்களுக்கு ஒருபோதும் மனமுவந்து கஷ்டங்களை ஏற்படுத்தாது. ஆனால் இந்நாட்டு மக்கள் இன்று பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிவாயு நெருக்கடி ஆகியவை நம் கண்களுக்கு புலப்படும் சிரமங்களாகும். இதன் காரணமாக இன்று மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதை நான் அறிவேன்.

இந்த நெருக்கடியை சமாளிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவேண்டிய தருணம் இது. மக்கள் எம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டை உண்மையாக நேசிப்பவர் யார் என்பதை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் என்ற ரீதியில் நாம் எமது பொறுப்புகளில் இருந்து விடுபட முடியாது, இந்த நெருக்கடியை போக்குவதற்கான திட்டங்களை ஒவ்வொன்றாக முன்வைக்க வேண்டும்.

எமது அரசியல் வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு முன், நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். எனவே பாரபட்சமின்றி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் கைகோர்க்குமாறு எதிர்க்கட்சியினரை மனதார அழைக்கின்றோம். அந்த அழைப்பு இன்றும் செல்லுபடியாகும் என்பதை நினைவூட்டுகின்றேன்.

நாட்டில் நிலவும் நெருக்கடியை சமாளிக்க பொருளாதார முகாமைத்துவம் மிகவும் முக்கியமானது.

அதற்காக மக்கள் போன்றே இச்சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் என்ற பாகுபாடின்றி மதிப்பிடப்படும் பொருளாதார முகாமைத்துவத் துறையில் சர்வதேச அனுபவமுள்ள மூன்று பொருளாதார நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய வங்கி உள்ளிட்ட நிதி நிர்வாகத்தின் சார்பில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒருவரை இது தொடர்பாக நியமிக்க நடவடிக்கை எடுத்தோம்.

மேலும், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட பல்வேறு சர்வதேச நிறுவனங்களுடன் ஏற்கனவே கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். அவர்களிடம் இருந்து நல்ல பதில் கிடைத்து வருகிறது. இந்த பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு தேவையான ஆதரவை எங்கள் நட்பு நாடுகள் எமக்கு வழங்கி வருகின்றன.

நிதியமைச்சர், நிதியமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் நாட்டிற்கான தமது பொறுப்புகளையும் கடமைகளையும் மிகுந்த அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி வருகின்றனர். ஆனால் இவ்வாறானதொரு சூழ்நிலையில் குறுகிய காலத்தில் நிலைமையை நிர்வகிப்பது குறித்தும், நீண்டகாலத்தில் நாட்டில் இவ்வாறான நெருக்கடிகள் மீண்டும் ஏற்படாதவாறு உறுதியான அடித்தளத்தை அமைப்பது குறித்தும் நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். அதனால்தான் எதிர்ப்புக்கு அப்பாற்பட்ட தலையீடு தேவை என்பதை நான் முன்பே உங்களுக்கு நினைவூட்டினேன்.

பேச்சுவார்த்தை மூலம் நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும். முன்னதாக காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுக்களை கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தேன். அவர்களின் பெறுமதியான யோசனைகளை எடுத்து தேவையான தலையீடுகளை செய்ய முன்வந்தோம் என்பதை நினைவுபடுத்த வேண்டும்.

நீண்டகால மின்வெட்டுக்கான காரணங்களில் ஒன்று, சரியான நேரத்தில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படாமையாகும். சிலர் வேண்டுமென்றே புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் அடுத்த படியைத் தவறவிட்டனர். இப்போது அந்த பழியை கடந்த காலத்தின் மீது சுமத்துவதில் அர்த்தமில்லை. அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மின் உற்பத்தி நிலையங்கள் எரிபொருள் பற்றாக்குறையை தீர்த்து வருவதாலும், மத்திய மலைநாட்டில் தற்போது மழை பெய்து வருவதாலும் இந்த பிரச்னையை மிக விரைவாக தீர்க்க முடியும்-என்றார். (அ)

## கிளிநொச்சி சந்தையில் பத்து கடைகள் உடைப்பு!

கிளிநொச்சி, ஏப். 20

கிளிநொச்சி சேவைச் சந்தையில் 10 கடைகள் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடைகள் உடைப்பு சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. நபர் ஒருவர் குறித்த கடைகளை உடைக்கும் காட்சிகள் சி. சி. ரீ. வி. கமெராக்களில் பதிவாகியுள்ளன.

உடைக்கப்பட்ட கடைகள் பெரும்பாலானவை புடவைக் கடைகள் என்பதுடன், பாத்திர கடைகள், அழகு சாதன கடைகள் மற்றும் தேநீர் கடையும் அடங்கும்.

இந்தச் சம்பவத்தில் பொருட்கள் எவையும் திருடப்படவில்லை என்பதுடன், தேநீர் கடையில் மட்டும் சிறு தொகை பணம் மற்றும் இரு குளிர்பானங்கள், சிற்றுண்டிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் ஜெயந்தன் தலைமையிலான குற்றவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதிக்கு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஏப். 20

அன்னை பூபதியின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்திய அமைதிப்படையின் காலத் தில் இரு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருந்த அன்னை பூபதி 1988 ஏப்ரல் 19ஆம் நாள் உயிரிழந்தார். இவரின், 34ஆவது நினை வேந்தல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி வளாகத்தில் பல்கலைக் கழகத்தின் மாணவர்களால் அனுட்டிக் கப்பட்டது.

இதன்போது மாணவர்களால் அன்னை பூபதியின் நினைவுருவப்படத்திற்கு மல ரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ஈகைச் சுடரேற்றி ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

## கட்சி பொறுப்புகளிலிருந்து சுரேன் ராகவன் நீக்கப்பட்டார்!

### சுதந்திரக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 20

இராஜாங்க அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சுரேன் ராகவன் கட்சியின் அனைத்து பொறுப்புகளிலும் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம். பி. தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் அவர் வகித்த உதவிச் செயலாளர், வன்னி மாவட்ட தலைவர் மற்றும் சர்வதேச உறவுகளுக்கான செயலாளர் ஆகிய பதவிகளிலும் இருந்து நீக்கப்பட்டுள்ளார். (ஐ)

## பின்வரிசைக்கு சென்ற ராஜபக்ஷ குடும்பம்!

கொழும்பு, ஏப். 20

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய முன்னாள் அமைச்சர்கள் அனைவரும் சபையில் ஆளும் கட்சியின் பின் வரிசை ஆசனங்களில் காணப்பட்டனர்.

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர் நேற்று முதன்முறையாக நாடாளு மன்றம் கூடியது.

சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ மற்றும் ஷசீந்திர ராஜபக்ஷ ஆகிய மூவரும் முன்னாள் அமைச்சர்கள். இது வரை முன்வரிசை ஆசனங்களில் அமர்ந்திருந்தவர்கள் நேற்று பின்வரிசையில் காணப்பட்டனர். ஆளும் கட்சியின் கடைசி வரிசையில் முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ அமர்ந்திருந்தார்.

மேலும், முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, எஸ்.எம்.சந்திரசேன, பந்துல குணவர்தன, சரத் வீரசேகர ஆகியோரும் அரசாங்கத்தின் பின்வரிசையில் காணப்பட்டனர். (அ)









## கரும்புள்ளியான்குளத்தில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஏப். 20

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான் குளத்தில் நீரில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது. கரும்புள்ளியான் குளத்தினுள் மீன்பிடிப்பதற்கு வலை யுடன் சென்ற குடும்பஸ்தரே இவ்வாறு நீரினுள் மூழ்கி உயிரிழந்தார்.

பாண்டியன்குளம் பகுதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான பசுபதி ஜெகதீஸ்வரன்(வயது-43) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை நட்டாங்கண்டல் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## 37 அத்தியாவசிய மருந்து வகைகள் தற்போது கையிருப்பில் இல்லை

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 20

646 அத்தியாவசிய மருந்துகளில் 37 மருந்துகள் தற்போது கையிருப்பில் இல்லை என சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன பாராளுமன்றத்தில் தெரி வித்தார்.

குறிப்பிட்ட சில வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படவிருந்த அவசரமற்ற சத்திர சிகிச்சைகள் ஒத்திவைக்கப்பட உள்ளதாகவும் மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சனை சமாளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வைத்தியசாலை கட்டமைப்பில் இல்லாத மருந்துகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தினார். (அ)

## அவிசாவளை பஸ் சாரதிகள் நேற்று திடீர் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 20

அவிசாவளையிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல் லும் தனியார் பஸ்களின் சாரதி கள் திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எரிபொருள் விலை அதிக ரிப்பு காரணமாகவே அவர்கள் இந்த பணிப்புறக் கணிப்பை மேற்கொண்ட தாக தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை, அவிசாவளை பஸ் நிலையத்திலிருந்து புறப் படும் அரச பஸ்களின் சேவை களும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக் கப்பட்டது.

இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-டார்லிங்,ஈட்டி
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை
நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10
திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
9.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு